# அரசு ஊழியர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாத இதழ்
ஆசிரியர்: ஆ.செல்வம்
மார்ச் - 2023
தனிப்பிரதி ரூ.20



# பிப்ரவரி 10 கோரிக்கைப் பேரணி






























அரசு ஊழியர்

**மாத இதழ்**

**2023 மார்ச்**

**மலர்:44 இதழ்:03**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**

**அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு**

**ஆசிரியர்: ஆ.செல்வம்**

**ஆசிரியர் குழு:**
**மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்**

**வரைகலை: கார்ட்டூன்வாசி**

**இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178**

**இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி**

**முகவரி:**
பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

**அச்சகம்:**
சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

**ஆண்டுச் சந்தா : ரூ.200**
**தனி இதழ் : ரூ.20**



இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.


# உள்ளே...


1. **வெடித்திடும் முழக்கம் எங்கே? பொடித்திடும் தடக்கை எங்கே?** *தலைவர் மடல்* ....4
2. **வாக்குறுதியை நிறைவேற்றிட... வாழ்வாதார உரிமையை மீட்டிட... செயின்ட் ஜார்ஜ் கோட்டை நோக்கி!** *பொதுச் செயலாளர் மேசையிலிருந்து*....7
3. **அந்தப் பக்கம் மட்டும் போயிடாதீங்க?**....13
4. **வீறு கொண்டு எழு! பெண்ணே!**....16
5. **தொழிலாளர் ஓய்வூதிய சட்டம் - 95 வரலாறும், பின்னணியும்** ....20
6. **உலகளாவிய மனித நிவாரணம்- ஒரு பார்வை**....23
7. **பழைய ஓய்வூதியம் திரும்பப் பெறுவது பாவமா?**....24
8. **மாநில அரசின் உரிமைகளை பறிக்கும் ஒன்றிய அரசின் மாநில கூட்டுறவு சங்கங்கள் (திருத்தச்) சட்டம்**....26
9. **நாடு முழுவதும் பாலஸ்தீன ஒருமைப்பாட்டு ஆதரவு இயக்கம்**....28
10. **அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகம் அமைப்பின் நோக்கங்கள்**....29
11. **இணையற்ற இயற்பியல் விஞ்ஞானி வில்லியம் ஹாக்கிங்**....30
12. **சிறு, குறு, நடுத்தர தொழில்களின் நிலையும், இளைஞர்களின் வேலைவாய்ப்புக் கனவுகளும்!** ....31
13. **தன்னலமற்ற தியாகமும்! தணியாத கோபமும்!** ....33

# வெடித்திடும் முழக்கம் எங்கே? பொடித்திடும் தடக்கை எங்கே?

மோடி அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவில் நுகர்வோர் செலவினம் குறைந்திருக்கிறது. நுகர்வு பொருட்கள் விலையேற்றம், பணமதிப்பிழப்பு நடவடிக்கை, தெளிவில்லாத ஜிஎஸ்டி வரிவிதிப்பு போன்றவற்றின் காரணமாக சிறுகுறுதொழில்கள் முடங்கிப்போய் மக்களின் வாங்கும் சக்தி குறைந்து நடுத்தர மற்றும் ஏழை இந்தியர்கள் தங்கள் உணவை குறைத்துக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். கடந்த 10 ஆண்டுகளில் இல்லாதஅளவுக்கு கிராமப்புற நுகர்வு அதிவேகமாக சரிந்திருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் உணவுப் பொருட்கள் விலை உயர்வினால் மாத சில்லரை பணவீக்கம் அதிகரித்துள்ளது காய்கறிகள், பழங்கள், பருப்பு வகைகள், முட்டை, இறைச்சி போன்றவற்றின் விலை நாளுக்குநாள் உயர்ந்துகொண்டே செல்கிறது. பணமதிப்பு நீக்கம் இதுவரையிலும் இந்தியா காணாத ஒரு பயங்கப் பேரழிவை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தியாவில் ஏழை எளிய நடுத்தர வர்க்க மக்கள் அன்றாடம் பால் வாங்குவதை குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் தொடர் விளைவுகள் ஒட்டுமொத்த பால் உற்பத்தியிலும் அது சார்ந்த வேலை வாய்ப்புகளிலும் மட்டுமல்ல இந்திய ஏழை எளிய நடுத்தர வர்க்க குழந்தைகளின் ஆரோக்கியத்திலும் எதிர்காலத்திலும் பாதிப்புகளை ஏற்படுத்த வல்லது.

ஒவ்வொரு ஆண்டும் ஒருகோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்போம் என்று வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த பாஜக அரசு அவர்களை இன்று தெருக்கோடியில் தள்ளியுள்ளது. இந்திய வரலாற்றிலேயே முன்எப்போதும் இல்லாத அளிவிற்கு கடந்த ஒன்பது ஆண்டுகளில் ஒரு கோடி வேலைவாய்ப்புகள் பறிக்கப்பட்டு அத்தனை பேரும் வீதிக்கு விரட்டப்பட்டிருக்கிறார்கள். புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்காதது ஏன் என்ற பிரச்னை இப்போது பின்னுக்குத் தள்ளப்பட்டு உள்ள வேலையையும் மிகப்பெரிய அளவிற்கு பறித்திருக்கிறார்கள் என்பது இந்திய இளைஞர்களின் கனவுகளுக்கு மிகப்பெரிய அடியாகும். இதன்மூலம் கோடிக்கணக்கான மக்களின் வாழ்வும், வாழ்வாதாரங்களும் சூறையாடப்பட்டுள்ளன.

ஐ.டி. நிறுவனங்கள் தங்களுடைய ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. குறைந்த நபர்கள் குறைந்த சம்பளத்தில் வேலை என்பது ஐ.டி. நிறுவனங்களில் சர்வசாதாரணமாகிவிட்டது. தொடர்ந்து வேலை நீக்க அறிவிப்புகள் வெளிவந்து கொண்டேயிருக்கின்றன. அடுத்து எந்த திசையிலிருந்து எந்த வேலைநீக்க அறிவிப்பு வெளிவரும் என்ற திகிலோடு மக்கள் வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்கண்ட தகவல்கள் இந்தியப் பொருளாதாரம் மிக மிகக் கடுமையான வீழ்ச்சிக்குள் விழுந்திருக்கிறது என்பதை பிரகடனம் செய்யும் முக்கியத் தகவல்கள் ஆகும். ஆனால் இது குறித்து மோடி அரசு சற்றும் கவலைப்படுவதாக தெரியவில்லை. இந்த விபரங்களை அலட்சியப்படுத்துவதிலும் தட்டிக்கழிப்பதிலும் மறுப்பதிலும்தான் ஆட்சியாளர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். இந்திய பொருளாதார நிலை குறித்து பல்வேறு தரப்பினருடன் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நடத்தும் ஆலோசனைகள் அனைத்தும் கார்ப்பரேட்டுகளுக்கு கருணையளிப்பதாகவும், ஏழை எளிய நடுத்தர மக்களை நடுத்தெருவில் விட்டுவிடுவதாகவுமே

இதுவரையில் அமைந்துள்ளன. பொதுத்துறைகளை தனியாருக்கு விற்றுவிடுதல் அல்லது மூடிவிடுதல், வங்கிகளை இணைத்துவிடுதல், நிர்வாகத்தில் ஆட்குறைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வேலை வாய்ப்பின்மை நிலையை கருத்தில் கொள்ளாமல் இருக்கின்ற வேலைகளை ஒப்பந்த மற்றும் அவுட்சோர்சிங் முறையில் செய்துகொள்ளுதல் போன்றவற்றின் மூலம் இந்திய பொருளாதாரத்தை தூக்கி நிறுத்திவிடலாம் என்று ஒன்றிய அரசு பகல் கனவு கண்டுவருகிறது.

உலகின் பெரும் பணக்காரராக பிம்பப்படுத்தப்பட்டு வந்த கவுதம் அதானி கீழே தள்ளப்பட்டிருக்கிறார். அவர் இந்திய தேசியப் கொடியைப் போர்த்திக்கொண்டு இந்திய நாட்டை கொள்ளையடித்துக் கொண்டிருப்பதாகவும் தன் மீதான மோசடிக் குற்றச்சாட்டுக்களை திசைத்திருப்ப 'தேசியவாதம்' என்ற கதை கட்டும் வேலையில் இறங்கியிருப்பதாக ஹிண்டன்பர்க் ரிசர்ச் நிறுவனம் கடுமையாகச் சாடியுள்ளது. அதானி குழும பங்குகளில் முதலீடு செய்துள்ள எல்ஐசி, எஸ்பிஐ போன்ற நிறுவனங்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது.இது இந்திய அரசியலில், பொருளாதாரத்தில் புயலைக் கிளப்பி விட்டுள்ளது.

இதன் விளைவுகள் நாளுக்கு நாள் அதிகரித்து ஒருநாள் விபரீதமாகிவிடக்கூடாது என்பதற்காக நாட்டிலுள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் சில அரசியல்கட்சிகளும் மத்திய சர்க்காருக்கு எச்சரிக்கை செய்ய போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தி வருகின்றன. பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு தாரை வார்த்திட மத்திய அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை கண்டித்தும் பொதுச் சொத்துக்களை பாதுகாத்திட வலியுறுத்தியும் இளைஞர்களின் வேலை வாய்ப்புகளுக்கு உத்தரவாதம், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், விவசாயிகள் நம்பிக்கையுடன் விவசாயம் செய்வதற்கான திட்டங்கள் போன்றவற்றை வலியுறுத்தி நாடு முழுவதும் கிளர்ச்சிப் போராட்டங்களும் பேரணிகளும் மாநாடுகளும் நடந்துகொண்டிருக்கின்றன. அகில இந்திய வேலை நிறுத்தம் மிகப்பெரிய அளவில் நாடுதோறும் நடத்திட நாட்டிலுள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் சில அரசியல் கட்சிகளும் அழைப்பு விடுத்துள்ளன. இந்தப் போராட்டங்களுக்கும் பொது வேலை நிறுத்தத்திற்கு ஆதரவளிப்பதும் பங்கேற்று மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளுக்கான மாற்றுவழி காண உறுதுணையாய் இருக்க வேண்டியதும் அரசு ஊழியர்களான நம் அனைவரின் தார்மீக கடமையாகும்.

தமிழகத்தைப் பொறுத்த வரை ஈரோடு கிழக்கு தேர்தல் நடவடிக்ககைகள், நடைமுறைகள் கட்சிகளின் பிரச்சாரம், பணங்கள், பரிசுகள் நடுநிலையாளர்களை முகம் சுழிக்க வைத்துள்ளது. வாக்களித்து சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் ஜனநாயகமுறையையும் அதற்கான விதிமுறைகளையும் அரசியல் கட்சிகள் குப்பைக்குள் தூக்கி வீசிவிட்டு எம்எல்ஏ பதவியை வியாபாரமாக்கிவிட்டன என்பதை இந்த தேர்தல் உணர்த்தியிருக்கிறது. வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் கொடுத்து இரண்டு பெரிய கட்சிகளுமே தாங்கள் செலவழிப்பதே கொள்ளையடிக்கத்தான் என்பதை தெள்ளத் தெளிவாக உணர்த்தியிருக்கிறார்கள். அரசு கஜானாவில் இருக்க வேண்டிய பணம் எங்கே இருக்கிறது என்பதை தேர்தல் காலத்து பணப்பரிசுகள் சொல்கின்றன. அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு, விவசாயிகளுக்கு தொழிலாளர்களுக்கு உண்டான உரிமைகளை, சம்பளங்களை, சலுகைகளை வழங்குவதற்கு கஜானாவில் பணமில்லை என்ற காரணம் கூறி வரும் ஆளும் கட்சியும், ஆண்ட எதிர்க்கட்சியும் கோடிக்கணக்கில் தேர்தல்களில் செலவழிக்கும் பணம் நிச்சயம் யாருடையதாக இருக்கும் என்பதை சொல்லத் தேவையில்லை. மக்களை வறுமை நிலையிலும், நோயிலும், பசி பட்டினியிலும் வைத்துவிட்டு இந்த அரசியல்வாதிகள் மக்களிடமிருந்து கசக்கிப்

பிழிந்து எடுத்த வரிப்பணத்தை தங்கள் கஜானாக்களில் அடைத்துகொண்டு தங்கள் சுயலாபங்களுக்காக மட்டுமே அரசாங்கத்தை அரசு இயந்திரத்தை பயன்படுத்துவது ஜனநாயகத்தை இழிவு படுத்தும் செயலாகும். தேர்தல்களில் ஜெயிக்க அரசியல் கட்சிகள் வகுக்கும் பார்முலாக்கள் எல்லாம் தேர்தல் வாக்குறுதி என்ற பொய் சாசனத்தின் மேல் போர்த்தப்படும் நம்பிக்கைத் துரோகங்கள் என்பதைத் தவிர வேறு என்னவாக இருக்கும்?

தேர்தலுக்குத் தேர்தல் ஆளும் கட்சியும் எதிர்கட்சியும் கூறும் வாக்குறுதிகளை நம்பி நம்பி ஏமாந்து போன சோனகிரிகளாக அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும், விவசாயிகளும், தொழிலாளிகளும் வைக்கப்பட்டிருப்பது இனிமேலும் நடக்காது என்பதை அரசியல் கட்சிகளுக்கு புரிய வைக்க வேண்டிய விளிம்பில் நாம் அனைவரும் நிற்கிறோம்.

நாட்டில் ஜனநாயகமும், நீதியும் கிடைக்கத் தக்கது அதிகாரமும் பணமும் வைத்திருப்பவர்களுக்குத்தான் என்ற போக்கை நாம் மாற்றாத வரை ஏய்த்துப் பிழைப்பவர்கள் தான் நம்மை ஆட்சி செய்வார்கள். அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தங்களின் சட்டப்படியான உரிமைகளுக்காக கடந்த இருபது ஆண்டுகளாக தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கும் நிலையில் அதை தருவதற்கான தார்மீகக் கடமையிலிருந்து ஆட்சியாளர்கள் நழுவப் பார்ப்பது புரட்சியின் தோளை உரசிப்பார்ப்பதற்கு ஒப்பானதாகும். எப்போதும் அமைதியாக இருப்பார்கள் அரசு ஊழியர்கள் என்ற நம்பிக்கையை இனி நாம் பொய்ப்பித்துக் காட்டியே தீர வேண்டும் தொடர்ந்து நடைபெற்று வரும் வாழ்வாதார உரிமைப் போராட்டங்களின் அடுத்த கட்டமாக அரசு ஊழியர்களின் அடையாள வேலை நிறுத்தம் 28.03.2023ஆம் தேதி நடைபெறுகிறது. அதன்பிறகும் அரசாங்கம் நமது கோரிக்கைகளின் பால் அக்கறை செலுத்தவிலை எனில் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிடக் கோரியும் நியாயம் கேட்டும் வரும் பட்ஜெட் கூட்டத் தொடரின் போது கோட்டையை முற்றுகையிடுவதென்று முடிவாற்றப்பட்டுள்ளது.

**நொடிக்கொரு சட்டமிட்டு**
**நொறுக்கிடும் ஆதிக்கத்தின் கொடிக்கு**
**இங்கே நாட்டை ஆளும்**
**கொற்றம் ஏன்? கோட்டைகள் ஏன்?**

**அடித்திடச் சீறுகின்ற**
**ஆற்றலால் வர்க்கமே நீ**
**வெடித்திடும் முழக்கம் எங்கே?**
**தூங்கும்போதும் துடித்திடும்**
**தோள்கள் எங்கே?**
**தூரோகத்தை தூள்படுத்திப்**
**பொடித்திடும் தடக்கை எங்கே?**
**போர் எங்கே? நரம்பெங்கே? நாளமெங்கே?**

**அறுத்தெறி தளையை - இந்த**
**அடிமைச் சங்கிலியைத் தூளாய்**
**உடைத்திட வாவா என்று**
**என் உதிரமே கொப்பளிக்க**
**அழைக்கின்றேன் தோழா உன்னை**
**களம் காண நீ வாராய்! வாராய்!**

●

## சூடா ஒரு கோப்பை சூப்

# எங்கள் நியாயம்!

கணவனைப் பறித்ததாலே
கண்ணகி சீற்றம் நியாயம்;
துணியினைப் பறித்ததாலே
திரௌபதி சபதம் நியாயம்;
மனைவியை இழந்ததாலே
ராமனின் யுத்தம் நியாயம்
அனைத்தையும் இழந்த எங்கள்
ஆவேசம் நியாயம்! நியாயம்!

# வாக்குறுதியை நிறைவேற்றிட... வாழ்வாதார உரிமையை மீட்டிட... செயின்ட் ஜார்ஜ் கோட்டை நோக்கி!

காலங்கள் மாறினாலும் ஆட்சிகள்
மாறினாலும் ஆள்வோரின் தயவினால்
அல்ல உரிமைகள் பெற்றது!
ஞாலம் முழுவதும் உரிமைகள் காக்கவும்
மீட்கவும் ஊழியர் பூண வேண்டியது
போர்க் கோலமே !

என்பது இன்றைய ஆட்சியாளர்களிடமும் வெளிப்பட்டுள்ளது. ஆம்... 2016 பிப்ரவரி மாதம் அந்த 10 நாள் தமிழக முழுவதுமே பரபரப்பாகிக் கொண்டிருந்தது அரசு ஊழியர்களின் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம். தமிழகத்தின் பல துறை அலுவலகங்கள் இழுத்துப் பூட்டப்பட்டு வேலை நிறுத்தம் முழு வீச்சில் துவங்கி பல ஊடகங்களில் செய்திகள் வந்தது. முதல் நாளில் லட்சத்திற்கு மேற்பட்டோர் எழுச்சியோடு பங்கேற்று வேலை நிறுத்தம் உச்ச நிலை அடைந்தது.

அத்தகைய எழுச்சி அன்று ஒரே நாளில் ஏற்பட்டதல்ல. ஏறக்குறைய அதிமுக அரசு பதவி ஏற்று பத்தாண்டுகளில் ஒவ்வொரு அரசு ஊழியனும் தன் நெஞ்சுக் கூட்டில் அக்கினிக் குஞ்சுகளாய் அன்று பிரசவித்தனர் என்றால் அது மிகையல்ல. 2011ல் சட்டமன்றத் தேர்தலின் போது அன்றைய தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் அரசு ஊழியர்களுக்கு பல வாக்குறுதிகளை அளித்தார்.அவர் சொன்னது சட்டமன்றத் தேர்தலில் நாங்கள் வெற்றி பெற்று தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் அரசு ஊழியர்களுக்கு அமுல்படுத்தப்பட்டு வரும் புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியம் வழங்கப்படும், தொகுப்பூதிய, சிறப்பு கால முறை ஊதிய முறைகளை கைவிட்டு அனைவருக்கும் முறையான காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்றெல்லாம் வாக்குறுதிகள் அளித்தார்.

ஆனால் ஆட்சி புரிந்த காலத்தில் மேற்கண்ட வாக்குறுதிகளை நினைவுபடுத்தி, அவற்றை நிறைவேற்ற வலியுறுத்தி எண்ணற்ற முறையீடுகள், ஏராளனமான இயக்கங்கள் நடத்திய பின்பும் அதிமுக அரசு கண்டு கொள்ளாத நிலையில்தான் தொழிற் சங்கத்தின் கடைசி ஆயுதமான வேலை நிறுத்தம் கையில் எடுக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. எனவே நீலகிரியில் நடைபெற்ற மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்குவோம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த வேலை நிறுத்தத்திற்கு முன்பாக கோரிக்கைகளை பேச்சு வார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டுமென முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. எதையும் அப்பொழுது இந்த அதிமுக அரசு கண்டுகொள்ளவில்லை. 2016 ஜனவரி 22 அன்று மாண்புமிகு முதல்வரை சந்திக்க தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் நேரில் சந்தித்து முறையிடுவது என்ற அடிப்படையில் அன்றைய தினம் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் சென்னையில் திரண்டனர். ஆனாலும் முதல்வர் சங்கத் தலைவர்களை சந்திக்க மறுத்தார். அன்று காவல் துறையோடு கடுமையான மோதலுக்குப்பின் தலைமைச் செயலாளர் அவர்கள் சந்தித்து பேசினார். முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக தெரிவித்தார். கோரிக்கைகள் குறித்து அரசு அழைத்து பேச முன்வராத பட்சத்தில் பிப்ரவரி 10ம் தேதி திட்டமிட்டபடி வேலை நிறுத்தம் தவிர்க்க முடியாதது என்பதை தலைமைச் செயலாளருக்கு சொல்லப்பட்டது. அதிமுக அரசின் இத்தகைய உதாசீனப்படுத்தும் மனோபாவம்தான் அரசு

ஊழியர்களை காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு தள்ளியது. 10.02.2016 காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் துவங்கியது. இந்த காலவரையற்ற வேலை நிறுத்தம் நடந்தே தீரும் என்பதை உணர்ந்த தமிழக அரசு சங்கங்களோடு பேச்சுவார்த்தை என்று நாடகங்களை அரங்கேற்றியது. அதன்படி 7.2.2016 முதல் துறைச் சங்கங்களையும், பொதுச் சங்கங்களையும், ஆசிரியர் அமைப்புகளையும் பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. அந்த பேச்சுவார்த்தையில் 10.2.2016 முதல் நடைபெற உள்ள வேலை நிறுத்தத்தில் நீங்கள் பங்கேற்பீர்களா என்பது பிரதான கேள்வியாக இருந்தது.

இப்பேச்சு வார்த்தைக்கு சென்ற அனைத்து சங்கப் போராட்டக்குழுவில் உள்ள துறைச் சங்கங்கள் அப்பேச்சுவார்த்தையில் முன்னிலை வகித்த அமைச்சர் பெருமக்களிடம் மிக தெளிவாக எடுத்து கூறியது ஒன்றே ஒன்றுதான். எங்கள் துறை சார்ந்த கோரிக்கைகள் பற்றி எங்களோடு பேசுங்கள். காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் குறித்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை அழைத்துப் பேசுங்கள். நாங்களும் அப்போராட்டத்தில் பங்கேற்க உள்ளோம் என்று கம்பீரமாக நெஞ்சுறுதியோடு கூறினார்கள் என்பதை இப்பொழுதும் பெருமையோடு பார்க்கிறோம்.

இப்பேச்சு வார்த்தையில் சங்கங்களின் உறுதியான நிலைப்பாட்டை சீர்க்குலைக்க முடியாது என்று உணர்ந்து கொண்ட தமிழக அரசு வேறு வழியின்றி 9.2.2016 அன்று இரவு 8 மணி வரை பேச்சு வார்த்தை நடத்தியது ஏறக்குறைய 2.1/2 மணி நேரம் நடைபெற்ற அப்பேச்சு வார்த்தையில் அரசு ஊழியர் சங்கம் முன் வைத்த கோரிக்கை நியாயமானவை என்றும் அரசு ஊழியர்களை இந்த அரசு மிகவும் மதிக்கிறது என்றும் அரசு ஊழியர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் அல்லும் பகலும் பணியாற்றுவதால் இந்த அரசின் திட்டங்கள் முழுமையாக சென்று அடைகிறது என்று சொன்ன அதிமுக அமைச்சர்கள் முதலமைச்சர் (ஜெயலலிதா) கவனத்திற்கு கொண்டு சென்று தீர்வினை உருவாக்குவோம் என்ற அடிப்படையில் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை கைவிட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். அதிமுக அமைச்சர்களின் வேண்டுகோளை பரிசீலித்த மாநில நிர்வாகிகள் இத்தகைய உத்திரவாதத்தை எழுத்துப்பூர்வமான கடிதமாக கொடுத்தால் வேலை நிறுத்தத்தை தற்காலிகமாக விலக்கிக் கொள்வது சம்பந்தமாக மாநில செயற்குழுவில் பரிசீலிக்க இயலும் என்று தெரிவித்தனர். அதிமுக அமைச்சர்கள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிடம் பேசி மீண்டும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளை அழைத்து பேசுகிறோம் என்று அமைச்சர்கள் தெரிவித்தனர். ஆனால் வேலை நிறுத்தம் துவங்கும்வரை அரசிடம் இருந்து அழைப்பு வரவில்லை.

அந்த பின்புலத்தில் 10.2.2016 அன்று துவங்கிய அந்த வேலை நிறுத்தத்தின் துவக்கமே மிக எழுச்சியாக இருந்தது. வேலை நிறுத்தம் துவங்கிய மூன்றாம் நாள் அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் மறியல் போராட்டங்களில் அனைத்து மாவட்டங்களிலும் பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் பங்கேற்றனர். தமிழகம் முழுவதும் 1 லட்சம் பேர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ்நாடு காவல்துறை கைது செய்தவர்களை முழுமையாக பதிவு செய்ய முடியாத நிலையும், உணவு அளிக்க முடியாத நிலையும் இன்றும் நினைவில் உள்ளது. இந்த மறியல் போராட்டங்கள் மாநிலம் முழுவதும் எழுச்சியோடு நடைபெற்று வந்த நிலையில் மக்களின் வாழ்க்கை கடும் பாதிப்பிற்குள்ளானது. நாம் நடத்துகின்ற போராட்டம் மக்களுக்கு எதிரானதல்ல. மக்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்ற சிந்தனையில் மறியல் போராட்டத்தை தவிர்த்து அரசை நிர்பந்திக்கும் வகையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளை அழைத்து பேசும் வரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள் காத்திருப்பு போராட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வரலாற்றில் காத்திருப்பு போராட்டம் என்பது முதல் முறையாக முடிவு செய்யப்பட்டது. புதிய போராட்ட வடிவம் முடிவு செய்யப்பட்ட 3 மணி நேரத்திற்குள் அனைத்து மாவட்டங்களிலும்

உற்சாகத்தோடும், எழுச்சியோடும் அதற்கான எற்பாடுகளை செய்தன. காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்களின் உணவு செலவுகளுக்கு போராட்ட களத்தில் நிதி வசூல், அரிசி, பருப்பு உள்ளிட்ட பொருட்கள் மூட்டை மூட்டையாக கொண்டு வந்து குவித்தனர். இன்றும் பெருமிதத்தோடு குறிப்பிட வேண்டிய ஒன்றாகும் அது.

மாநிலம் முழுவதும் இந்த காத்திருப்பு போராட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலும் 3ஆயிரத்திற்கும்மேல் ஊழியர்கள் பங்கேற்று மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் இழுத்து பூட்டப்பட்டன. போராட்ட களத்தில் வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர் முதல் அலுவலக உதவியாளர் மற்றும் தொகுப்பூதிய ஊழியர்களும் தரையில் அமர்ந்து இரவு முழுவதும் காத்திருந்த ஒரு சமத்துவம் அங்கே அரங்கேறியது.

10.2.2016 முதல் தொடங்கி நடைபெற்று வந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை கண்டு கொள்ளாமல் இருந்த தமிழக அரசை அசைத்தது இந்த காத்திருப்பு போராட்டம் என்றால் மிகையாகாது. இந்த போராட்டத்தினால் 19.2.2016 முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் சட்டப் பேரவையில் 110 விதியின் கீழ் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட வேண்டிய நிர்பந்தத்தை உருவாக்கியது என்ற வகையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போராட்டமாக மாறியது.

தமிழக வரலாற்றில் பலமுறை காலவரையற்ற வேலை நிறுத்தம் நடைபெற்று இருந்தாலும் அவற்றில் 1977, 1988, 2002, 2003 ஆகிய போராட்டங்கள் குறிப்பிடத் தக்கவையாகும். 10.2.2016ல் துவங்கி 19.2.2016 முடியும் வரை கடந்தகால அனுபவங்களைப்போல் அல்லாமல் சங்கமும் போராட்டமும் சங்கத்தின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. இப்போராட்டம் எதிர்கட்சித் தலைவர்களையும் அச்சுறுத்தியது. அசையாத அரசை அசைய வைத்த போராட்டம். மேற்கண்ட போராட்டங்கள் தற்பொழுது நினைவில் கொள்ள வேண்டியுள்ளது.

2002ல் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் இணைந்து நடத்திய பத்து நாள் வேலை நிறுத்த போராட்டம் நடைபெற்றது. எந்தவிதமான பலனும் கிடைக்காத நிலையில் இப்போராட்டங்கள் முடித்துக்கொள்ளப்பட்டன. மீண்டும் 2003ல் அனைத்து அரசு ஊழியர், ஆசிரியர்களை உள்ளடக்கிய வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெற்றது. இரண்டு நாட்கள் மட்டும் தலைமையின் கட்டுப்பாட்டில் இந்த போராட்டம் மூன்றாம் நாள் உதிரி சங்கங்களின் நடவடிக்கையால் போராட்டக்குழுவின் அனுமதியின்றி நீதி மன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. பின்னர் மேல் முறையீடு, நீதி மன்றம் சென்றது. கடைசி வரை இப்போராட்டம் சங்கத்தின் கட்டுப்பாட்டில் வந்து சேரவில்லை. ஆனால் அரசு ஊழியர் சங்கம் மட்டுமே அப்போராட்டத்தை தனது அமைப்பின் வளர்ச்சிக்கான... வெற்றிகரமான போராட்டமாக தகவமைத்துக்கொண்டது. அதன் பின்பு 2004ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது மக்களோடு இணைந்து வாக்குரிமையை பயன்படுத்தி அரசுக்கு தக்க பாடம் கற்றுக்கொடுத்தால் அதே அரசிடமிருந்தே மீண்டும் பல உரிமைகள் திரும்ப பெறப்பட்டன என்பது வரலாற்று உண்மையாகும்.

அதேபோல் ஜாக்டோ-ஜியோ போராட்டம் தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு ஊதியமாற்றம் ஏற்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் இடைக்கால நிவாரணம்13.10.2017க்குள் வழங்க வேண்டும் என்று மிக சக்தியான போராட்டம் தொடர் மறியல் தமிழகம் முழுவதும் எழுச்சியான போராட்டம், நீதிமன்ற தீர்ப்பு தந்த நெருக்கடி ஊதியக்குழு தனது அறிவிக்கை அவசரஅவசரமாக தயாரித்து அரசுக்கு சமர்ப்பித்தது. அதனை பரிசீலனை செய்து அரசும் அவசரமாக அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் நலனை புறந்தள்ளிவிட்டு அரசாணை வெளியிட்டது. இது ஒருபுறம் இருந்தாலும் ஊதியக்குழு அறிக்கையை வெளியிட்டது உண்மையில் நமது போராட்டத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். நாம் பெற்ற வெற்றி நமது

உழைப்பும் குன்றாத உணர்வே அதற்கு அடித்தளமாகும்.

நீதி மன்றத்தில் அரசு தலைமை வழக்கறிஞர் ஊதியக்குழு அறிக்கை ஆறுமாத காலம் தேவைப்படும் அரசுக்கு பொருளாதார நெருக்கடி இருக்கிறது என்று நீதிமன்றத்தில் கூறினார். மறியல் போராட்டம் தமிழகம் முழுவதும் வீறு கொண்ட நடந்து கொண்டு இருக்கிறது. அரசு தரப்பில் இப்போராட்டம் நியாயமற்றது. குறைவான எண்ணிக்கையில் தான் ஊழியர்கள் பங்கு கொண்டு உள்ளனர் என்று அரசு தரப்பில் வாதிடப்பட்டது. ஆனால் நீதியரசர்கள் தினம் தினம் நான் தொலைக்காட்சியை பார்த்துக்கொண்டு இருக்கிறேன். ஒவ்வொரு நாளும் அரசு ஊழியர், ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது என்று நீதியரசர்கள் அரசு வழக்கறிஞரிடம் கேள்வி எழுப்பினர். அது மட்டுமல்ல. முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் 2011ல் தேர்தல் கால பரப்புரையிலும், தேர்தல் அறிக்கையிலும் அதிமுக ஆட்சிக்கு வந்தால் புதிய பென்சன் திட்டம் திரும்பப் பெறப்படும், ஊதிய முரண்பாடுகள் களையப்படும் என தெரிவித்தது. 2014ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் 2014-15ஆம் ஆண்டுகளுக்கான வரவு-செலவு திட்ட உரையில் நிதியமைச்சர் வாசித்தபோது 2016-17ஆம் ஆண்டு முதல் ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தப்படும் என கூறப்பட்டது. முந்தைய ஊதியக்குழுக்கள் போலன்றி இக்குழுவின் பரிந்துரைகளை உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் பிந்தைய ஆண்டுகளில் தவணைகளில் நிலுவைத் தொகை வழங்க வேண்டிய சூழ்நிலை எழாது என கூறப்பட்டதையும் நீதியரசர்கள் கேள்வி கேட்கப்பட்டு உங்களின் முன்னாள் முதலமைச்சர் தேர்தல் காலத்தில் வாக்குறுதி தெரிவித்துள்ளதைதான் நிறைவேற்ற வேண்டும் என ஜாக்டோ-ஜியோ அமைப்பு கேட்கின்றது. புதிய கோரிக்கைகள் முன் வைத்து இவர்கள் போராடவில்லை என்று கேட்கப்பட்டது. அதனையும் தாண்டி நமது சங்க வரலாற்றில் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால் நீதியரசர்கள் அரசு உடனடியாக கோரிக்கை நிறைவேற்றவில்லை என்றால் நீதி மன்றமே தலையிட்டு அவர்களது கோரிக்கைகளை தீர்த்து வைக்கும் என்று நீதியரசர்கள் கூறியது நமது அமைப்புக்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம். அதனை தொடர்ந்து நீதி மன்றத்தில் அரசு தலைமை வழக்கறிஞர் தெரிவித்த கருத்துக்கு மாறாக ஊதியக்குழுவில் பல்வேறு முரண்பாடுகள் இருந்தாலும் முன் கூட்டியே ஊதியக்குழு அறிக்கையை கொண்டு வந்தது நமது வரலாறு காணாத வெற்றியாகும்.

ஊதியக்குழுவில் பல்வேறு முரண்பாடுகள் இருந்தாலும் சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகளில் இப்படிப்பட்ட கூட்டமைப்பு ஏற்படுத்தி தலைமைச் செயலாளரை நீதி மன்றத்தில் நிறுத்திய வரலாறு இந்தியாவில் எந்த மாநிலத்தைத் தவிர நடைபெற்றதாக இல்லை. அது மட்டுமல்ல. அந்த போராட்ட காலங்களை உயர் நீதி மன்றம் முறை பணிக்காலமாக அறிவித்து வரலாறு படைந்த போராட்டம் மறக்க இயலாதது என்பதை நினைவில் கொள்ள வேண்டியிருக்கிறது.

இத்தகைய வரலாற்றுப் பின்னணியில் கடந்த 10 ஆண்டு கால அதிமுக ஆட்சியில் நமது கோரிக்கைகளை நிறைவேற்ற மறுத்த, சந்திக்க மறுத்த, தொழிற்சங்க ஜனநாயத்தை கேலி கூத்தாக்கிய, மக்கள் விரோத, ஊழியர் விரோத அதிமுக அரசை அப்புறப்படுத்தி நம்முடைய கோரிக்கை தேர்தல் கால வாக்குறுதிகளாக சேர்த்தது மட்டு அல்ல. கடந்த கால போராட்டங்களிலும் ஆயத்த மாநாடுகளில் நேரடியாகவும், காணொலி மூலம் பங்கேற்று நமது கோரிக்கைகளை கழக அரசு வந்தால் அத்தனையும் நிறைவேற்றப்படும் என்று நம்பிக்கை விதைகளை விதைத்தார் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள். ஆனால் திமுக அரசு ஆட்சி பொறுப்பு ஏற்று 20 மாதங்கள் ஆன நிலையில் நமது கோரிக்கைகள் ஒன்றைக்கூட நிறைவேற்றப்படவில்லை. குறைந்தபட்சம் வழக்கமாக வழங்க வேண்டிய அகவிலைப்படியை கூட உரிய தேதியில் வழங்காமல் சுதந்திர தின உரையிலும்,

புத்தாண்டு தினத்தில் அரசு கடுமையான நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் அரசு ஊழியர், ஆசிரியர்கள் நலனில் அக்கரையுள்ள அரசு என்ற அடிப்படையில் அகவிலைப்படியை அறிவிக்கிறேன் என்று கூறுகின்றார் முதல்வர். இது ஏதோ புதிய சலுகை அல்ல. வாலாயமாக அறிவிக்க வேண்டிய அகவிலைப்படியை சலுகை என அறிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே கடந்து வந்த வரலாறு குறித்து பின்னோக்கி பார்ப்போமேயானால் தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற மறுத்த கடந்த அதிமுக அரசை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் வலுவான போராட்டத்தின் மூலம் ஆட்சியில் இருந்து அப்புறப்படுத்தி வரலாறு படைத்துள்ளோம் என்பதை தற்பொழுது ஆட்சியில் உள்ள திமுக அரசு உள்வாங்கி கொள்ள வேண்டும்.

மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளும், ஜாக்டோ-ஜியோ நிர்வாகிகளும் சந்தித்து பல முறை பேசப்பட்டது. அந்த சந்திப்பில் உங்களின் நியாயமான கோரிக்கைகளை பரிசீலித்து நிதி நிலை சீரானவுடன் கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்று தொடர்ந்து கூறி வருகிறார். எப்பொழுது நிறைவேற்றப்படும் என்று இலக்கு இல்லாமல் தமிழக முதலமைச்சர் மௌனம் காத்து வருகிறார்.

தமிழக முதலமைச்சரின் மௌனத்தை கலைத்திட நமது சங்கத்தின் சேலத்தில் நடைபெற்ற மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் 5 கட்ட இயக்கத்தை அறிவித்திருக்கிறோம். மூன்று கட்ட இயக்கத்தை மாநிலம் முழுவதும் எழுச்சிகரமாக நடந்து முடிந்துள்ள நிலையிலும் தமிழக அரசு நமது வாழ்வாதார உரிமை மீட்பு கோரிக்கையான பழைய பென்சன் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும். கொத்தடிமை கூலி முறையில் 39 ஆண்டுகள் சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரியும் சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்புற நூலகர், தொகுப்பூதியத்தில் பணிபுரியும் எம்.ஆர்.பி. செவிலியர்கள் உள்ளிட்ட 3.1/2இலட்சம் ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம், முடக்கப்பட்ட சரண்டர்,நிலுவையில் உள்ள அகவிலைப்படி, அரசுத்துறைகளில் 6 இலட்சம் காலிப் பணியிடங்களை நிரப்புதல், அரசு ஆணை எண்.115,152,139,10 ஆகிய ஆணைகள் அவுட்சோர்சிங் முறை அத்தக்கூலி முறை அரசு ஆணையை முற்றிலும் ரத்து செய்திட வேண்டும். நிதி சாராத கோரிக்கையான 41 மாத சாலைப்பணியாளர்களின் பணி நீக்கக் காலம் பணிக்காலமாக அறிவிக்க வேண்டும், 21 மாத ஊதிய நிலுவை தொகை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தன்னோடு இணைந்திருக்கின்ற 64க்கும் மேற்பட்ட துறைச் சங்கங்களை உள்ளடக்கிய போராட்டக் குழுவை கடந்த காலங்களை போல் இணைத்துக் கொண்டு நமது வாழ்வாதார உரிமை கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி மார்ச் 28 ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் நடத்திட திட்டமிட்டுள்ளோம். 39 ஆண்டுகளில் பல வெற்றிகரமான போராட்டங்களை நடத்தி இருக்கிறோம். இந்த வேலை நிறுத்தப் போராட்டம் வெற்றிகரமானதாக நடத்திடுவோம். ஆங்கிலத்தில் சொல்லப்படுகிற "Not in Lenth, but in Strenth" என்ற பழமொழிக்கேற்ப இப்போராட்டம் சகல பகுதி ஊழியர்களை, பிரிவினைரை இணைத்துக்கொண்டு ஒரு வரலாற்று சிறப்பு மிக்க போராட்டமாக நடத்திட வேண்டியுள்ளது.

பொதுவாக ஒரு நல்லாட்சி அரசு எப்படி இருக்க வேண்டும் என்று 2013 உச்ச நீதி மன்றம் தீர்ப்பு கூறியுள்ளது கவனிக்கத்தக்கது. மாநில அரசின் பங்கு என்பது ஊழியர்களைப் பொறுத்த மட்டில் ஒரு முன் மாதிரி முதலாளியாக இருக்க வேண்டும். எதிர் காலத்தில் ஊழியர்களின் உரிமை கோரிக்கைகளின் பேரில் சினம் கொள்ளாமல் அது இருக்கும் என்ற எதிர்பார்ப்பையும் பொறுப்பில்லாத அலட்சியப் போக்குடன் பெரிய அளவில் விலகி நின்று வேடிக்கை பார்க்காது என்ற நம்பிக்கையையும் ஊழியர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை அது எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்களின் நம்பிக்கை நீர்த்துப் போகும் சூழ்நிலையை

ஏற்படுத்த கூடாது. ஒவ்வொரு ஊழியரின் நம்பிக்கையையும் மதிப்பும், மகிமையும் வாய்ந்தது. அதை முன்மாதிரி முதலாளியாக இருக்கும் அரசு ஏமாற்றமாகவோ, துரோகமாகவோ மாற்றி அவர்கள் பணியேற்றதில் சதுரங்க விளையாட்டு ஆடக் கூடாது. அமைதி உணர்வும், சிரத்தையான நேர்மையும் ஒவ்வொரு நிகழ்விலும் எதிரொலிக்க வேண்டும். நம்பகமான சூழல் நிலவ வேண்டும். ஊழியர்கள் அனைவரும் தாங்கள் கண்ணியத்துடனும் நேர்மையாகவும் நடத்தப்படுகிறோம் என்றும் தங்கள் நம்பிக்கைக்கு பங்கம் ஏற்படாது என்றும் நிச்சயமாக நம்ப வேண்டும். அப்போதுதான் நல்லாட்சி என்ற கருத்துப்படிமம் உறுதிபடும்.

அரசு ஊழியர்கள் அனைவரும் இந்த அரசை மேற்கூறப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலேயே நம்பியிருக்கிறார்கள். அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் பரிசீலித்து தங்களின் கோரிக்கைகளை மொத்தமாக இல்லாவிடிலும் கூடுமான அளவில் நிறைவேற்றும் சூழல் ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறோம். அப்போதுதான் அரசு நிர்வாகமும் மக்கள் திட்டப் பணிகளும் தொய்வின்றி நடக்கும் சமூகத்தில் நலமும் வளமும் செழிக்கும்.

மேலும் இன்றைய உலகமயமாக்கல் சூழலில் அதிகரித்து வரும் விலைவாசி உயர்வு, பண வீக்கம் ஆகியவற்றை அரசு ஊழியர்களுக்கான கோரிக்கைகளை நிறைவேற்றினால் மேலும் அதிகரிக்கும் என்று ஊடகங்களில் உண்மைக்கு மாறான கருத்து திணிப்பு பரவலாக முன்னெடுத்து செல்லப்படுகிறது. மத்திய அரசின் தவறான பொருளாதார கொள்கைகளால் நாட்டு மகக்கள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார்கள்.

ஆகவே நாம் நடத்துகின்ற மார்ச்-28 ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெப்போதையும் விட ஆவேசம் மிக்கதாகவும், ஒரு யுத்தத்தை நடத்துவது போன்று ராஜரந்திரம் மிக்கதாகவும் இருக்க வேண்டியுள்ளது. இருப்பினும் கடந்தகால வரலாறுகளைப் பார்க்கும்போது பல ஊதியக்குழுக்களின் அறிக்கைகளும் கோரிக்கைகளும் அரசு ஊழியர்களின் கண்ணீரைத் துடைப்பதைப் போல பாசாங்கு செய்தது கண்ணத்தில் அறைந்த நிகழ்வுகள் தான் நடந்துள்ளன. அதே வழி நிதிப் பற்றாக்குறைகளையோ, விதிகளையோ காரணம் காட்டி நடக்குமேயானால் அரசு ஊழியர்கள் வீதிக்கு வந்து சமரசமற்ற போராட்டங்களை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை.

போராட்டங்கள் எவ்வளவு அவசியமானவை, வலிமையானவை என்பதை 39 ஆண்டு கால அரசு ஊழியர் நெடுந்துயர் நமக்கு உணர்த்தி இருக்கிறது. இந்தப் போராட்ட வரலாற்றை அரசு ஊழியர் ஒவ்வொருவரும் அறியச் செய்ய வேண்டியது நம் அனைவரின் கடமையாகும். அப்போதுதான் போராட்டங்கள் போர்க்குணத்தோடு நடக்கும். நாம் கேட்கும் உரிமைகளும் கிடைக்கும்.

ஓடினால் தான் நதி

வீசினால் தான் காற்று

பாடினால் தான் இசை

போராடினால் தான் அரசு ஊழியர்

என்பதை நினைவில் நிறுத்தி 2023 மார்ச் 28ல் நமது வாழ்வாதார கோரிக்கையை மீட்டிட எழுச்சி மிக்க ஒரு நாள் வேலை நிறுத்தத்தை நடத்திடுவோம். இந்த போராட்டத்தாலும் அரசு நமது கோரிக்கைகளை செவி மடுத்து தீர்வு காணாவிட்டால் அடுத்த கட்டமாக தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்ற லட்சக்கணக்கான ஊழியர்கள் பங்கேறும் வகையில் பட்ஜெட் கூட்டத் தொடர் நடைபெறும்பொழுது சென்னையில் கோட்டை முற்றுகைப் போராட்டத்தை நடத்துவோம். இது நாடு முழுவதும் இப்போராட்டம் தீவிரமையும் என்பதையும் அரசு உணர்வது நல்லது. அன்றின் இவை அனைத்துக்கான விலையை இவ்வரசு கொடுத்தே தீர வேண்டிய நிலை தோன்றுவதை யாராலும் தடுக்க முடியாது.

ஆகவே தோழர்களே போராட்டக் களத்தில் பெரும் துணிவோட நிற்போம்! நமக்கான உரிமைகளை வென்றெடுக்கும் வரை கண் துஞ்சாமல் கடமையாற்றுவோம்.!! ●

# அந்தப் பக்கம் மட்டும் போயிடாதீங்க?

**- ஜிஜி**

**வ**ழக்கமாக என்னுடன் டீ சாப்பிட வரும் காம்ரேட் ஒரு நாள் காய்ச்சல் காரணமாக விடுப்பு எடுத்திருந்ததால் நான் மட்டும் தனியாக டீ சாப்பிட டீக்கடைக்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது ஏதேச்சையாக வந்த அலுவலக நண்பர் என்னிடம் தோழர் உங்ககிட்டே ஒண்ணு கேட்டா தப்பா நெனச்சுக்க மாட்டீங்களே?'' என்றார். ''நாமெல்லாம் அகவிலைப்படி உயர்வு, சரண்டர், வரையறுக்கப்பட்ட ஊதியம் போன்றவற்றை கேட்டுப் போராடிக்கிட்டிருக்கோம். இதெல்லாம் அரசு ஊழியர்களுக்கு கொடுக்கப்பட வேண்டியவைன்னு அரசாங்கங்கள் ஏத்துகிட்டு இதுநாள் வரை கொடுத்துகிட்டு வந்தவைதானே தோழர். அப்படி இருக்கும்போது அரசாங்கங்கள் கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கக் கூடிய உரிமைகளை அவர்கள் தராததுனால நமக்கான உரிமைகளை கொடுக்க நீதிமன்றத்துல கேஸ் போட்டா என்ன தோழர்?'' என்று கேட்டார்.

அவர் கேட்டது சரியான கேள்விதான் என்றாலும் அது நடைமுறைக்கு சாத்தியமில்லை என்பதை எப்படி விளக்குவது என்ற யோசனை எனக்குள் எழுந்தது. இன்றைய நீதிமன்றங்களில் பெரும்பாலான தீர்ப்புகள் நம்முடைய கோரிக்கைகளை தீர்ப்பதாக வருவதில்லை, அதையும் மீறி நிதிமன்றங்கள் கடுமையாக நடந்துகொண்டு அரசாங்கத்தை பணித்தாலும் அரசாங்கங்கள் நமக்கு கிடைக்க வேண்டிய உரி்மைகளை குறைத்து வழங்குவததோடு மட்டுமல்லாமல், பெறவேண்டிய நாளில் இருந்து கொடுக்க வேண்டிய உரிமையை அரசாணை வெளியிடும் நாளிலிருந்து அறிவிப்பதும், நாம் பார்த்து வருகின்ற ஒன்று. அரசாங்கங்கள் நிதிநிலை மோசமாக உள்ளதால் எங்களால் அரசு ஊழியர்களுக்கு வழங்க முடியவில்லை என்றோ ஊதியத்தை குறைத்திருப்பது அரசாங்கத்தின் கொள்கை முடிவு என்றோ நீதிமன்றங்களில் அரசுத் தரப்பில் வைக்கப்படும் வாதங்களைக் கேட்டு நீதிமன்றங்கள் செய்வதறியாது நிற்பதும் தான் நாம் கண்டுகொண்டிருக்கும் காட்சிகள்.

''சேட்டா, ரெண்டு டீ ஸ்டாராங்க போடுங்க.'' என்று சொல்லிவிட்டு நண்பரிடம் பேச்சைத் தொடர்ந்தேன். தோழர் நாம அந்த தப்பை எப்பவும் செஞ்சுடக் கூடாது. நம்முடைய சங்கம் எப்போதும் உரிமைக்காக அரசாங்கத்துடன் போராடியிருக்கே தவிர நீதிமன்றத்தை நாடியதில்லை. கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக நம்முடைய போராட்ட வரலாற்றை எடுத்துப் பார்த்தீர்களானால் நம்முடைய உரிமைக்காக நாம் நீதிமன்றத்தை நாடியதில்லை என்பது புரியும். எதிர் தரப்பினரோ அல்லது அரசுக்கு ஆதரவான சங்கங்களோ தனி நபர்களோ நம்முடைய போராட்டங்கள் மும்முரமாக நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் நம்முடைய போராட்டத்தினால் மக்களுக்கு அசௌகரியம் ஏற்பட்டிருப்பதாக வழக்கு போடுவார்கள். அந்த வழக்குகளை எதிர்கொள்ளத்தான் நாம் நீதிமன்றங்களில் வாதிட்டிருக்கிறோமே தவிர நாமாக வழக்கு போட்டது கிடையாது. 2003ல் நடந்த வேலை நிறுத்தப்போராட்டத்தில் அதிமுக அரசு 186000 பேரை ஒரே அரசாணையில்



டிஸ்மிஸ் செய்ததைக்கூட எதிர்த்து ஏதோ ஒரு சங்கம் வழக்கு தாக்கல் செய்து அதன்பேரில் வழக்கு உச்சநீதிமன்றம் வரை சென்று அங்கே போராட்டம் நடத்துவதற்கு அரசு ஊழியர்களுக்கு தார்மீக உரிமையில்ல என்று நீதிமன்றம் கூறியதை எதிர்கொண்ட அனுபவம் நமக்கு இருக்கிறது. எனவே எக்காரணம் கொண்டும் நம்முடைய உரிமைகளை அரசாத்தோடு முட்டி மோதி நிறைவேற்றிடப் பார்க்க வேண்டும் அல்லது அடுத்துவரும் தேர்தலில் அந்தக் கட்சியை வீட்டுக்கு அனுப்பும் வேலையைச் செய்ய வேண்டும். அதைத்தான் நாம் செய்து கொண்டிருக்கிறோம்.'' என்றேன்

''தோழர் எதோ சில சந்தர்ப்பங்களில் நீதிமன்றங்களில் நீங்கள் சொன்னது போல நிகழ்ந்திருக்கலாம். அதுவே எல்லா தருணங்களிலும் நிகழ்ந்துவிடும் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.'' என்றார்.

அதற்கு நான், ''தோழர் நம்ம ஊருல ஒரு பழமொழி செல்வாங்க 'சாட்சிக்காரன் காலில் விழறதை விட சண்டைக்காரன் காலில் விழுந்து விடலாம்'னு கேள்விப்பட்டிருக்கீங்களா? அது நமக்குத்தான் சொல்லியிருக்காங்க நாம நமது உரிமைகளுக்காக நீதிமன்றத்தை அணுகறதை விட அரசாங்கத்தோட போராடறதுதான் சிறந்த வழி. உரிமை கேட்டு நீதிமன்றத்துக்கு போறதுங்கறது நம்முடைய உரிமைகளை நீதிமன்றத்தின் காலடியில அடகு வைக்கறதுக்கு சமம்.'' என்றேன்.

ஸ்டாராங்க் டீயின் ஒரு உறிஞ்சலைத் தொடர்ந்து, நண்பரின் முகத்தைப் பார்த்தேன். அவருடைய உடல் மொழியும் பேச்சும் நான் சொன்னதில் முழு உடன்பாடு இல்லாதை காட்டியது. அவரிடம் தொடர்ந்தேன்.

''தோழர், ஒரு கதை சொல்லட்டுமா? வழிப்போக்கர்கள் ரெண்டுபேர் காட்டுவழியா போய்க்கிட்டு இருநத்தாங்க. இரவு நேரம் ஆயிடுச்சி. ஒரு மரத்தடியில தங்கிட்டு அடுத்தநாள் காலையில பயணத்தை தொடரலாம்னு முடிவு பண்ணி அந்த மரத்தடியில தங்கினாங்க. அவங்க ரெண்டு பேருக்கும் நடந்த வந்த களைப்பு, பசி ரெண்டும் இருந்தது. ஒருத்தர் தன் பையில இருந்து பார்சலை எடுத்தார் அதுல ஐந்து சப்பாத்தி இருந்தது. அடுத்தவர் தோள் பையில இருந்து எடுத்த பார்சல்ல மூணு சப்பாத்தி மட்டும் இருந்தது. ரெண்டு பேரும் அவங்க அவங்க பார்சலை பிரிச்சு சாப்பிட ஆயத்தமான போது, அந்த மரத்தடிக்கு இன்னொருத்தர் வந்து சேர்ந்தார். அவர் பார்க்கறதுக்கு பெரிய பணக்காரர் போல தெரிஞ்சார். ஆனா அவரு கிட்டே சாப்பிட எதுவும் இல்லை. அதனால அவரு அந்த ரெண்டு பேருகிட்டயும் தனக்கு சாப்பிட எதுனா கொடுங்க நான் வேணா பணம் தரேன்னு சொன்னாரு. வழிப்போக்கர்கள் ரெண்டு பேரும் பணமெல்லாம் வேணாம் எங்க கிட்ட இருக்கிற எட்டு சப்பாத்திகளையும் சரிசமமா மூணு பங்கா பிரிச்சு சாப்பிடலாம்னு சொன்னாங்க. ஆனா அந்த எட்டு சப்பாத்தியை எப்படி மூணா பிரிக்கறதுன்னு அவங்களுக்குத் தெரியல. அப்போ அந்த செல்வந்தர் சொன்னாரு, ''ஒவ்வொரு சப்பாத்தியையும் மூணு பங்கா பிரிச்சா எட்டு சப்பாத்தி இருபத்தி நாலு துண்டுகளாயிடும் அதை எட்டு எட்டு துண்டுகளா நாம மூணு பேரும் சாப்பிடலாம்.'' அவரு சொன்ன ஐடியா சரியான ஐடியாவா தோணுனதுனால அதன்படியே எட்டு சாப்பாத்திகளையும் 24 துண்டுகளா பிரிச்சு தலா எட்டு துண்டுகள் வீதம் மூணு பேரும் சாப்பிட்டுட்டு படுத்து துhங்கிட்டாங்களாம்.

அடுத்த நாள் காலையில மூணு பேரும் எழுந்து அவங்க அவங்க போக வேண்டிய திசையில போக தயாரானபோது அந்த செல்வந்தர் தன்னுடை பையில இருந்து எட்டு தங்க நாணயங்களை எடுத்து அவங்க கையில கொடுத்தாராம். நேத்து ராத்திரி என்னுடைய பசியை போக்க நீங்க வெச்சிருந்த சப்பாத்தியை நீங்க முழுவதும் சாப்பிடாம எனக்கு பிரிச்சுக் கொடுத்து என்னுடைய பசியை போக்கினீங்க அதுக்காக இந்த எட்டு தங்க நாணயங்களையும் நான் உங்க நல்ல மனசுக்கு பரிசா கொடுக்கறேன். நீங்க ரெண்டு பேரும் இதை பிரிச்சு எடுத்துக்கோங்கன்னு சொல்லிட்டு அவரு கிளம்பிட்டாரு. இப்போ அந்த எட்டு தங்க நாணயங்களை பிரிச்சுக்கறதுல ஒரு சின்ன விவாதம் அந்த ரெண்டு பேருக்கும் நடந்தது. மூணு சப்பாத்தி வச்சிருந்தவன் நாம ரெண்டு

பேரும் ஆளுக்கு தலா நாலு நாலு தங்க நாணயங்களை எடுத்துக்கலாம்னு சொல்ல அடுத்த வழிப்போக்கன் நான் ஐந்து சப்பாத்தி வச்சிருந்தேன், நீ மூணு சப்பாத்தி தான் வச்சிருந்தே அதனால எனக்கு ஐந்து தங்க நாணயமும் உனக்கு மூணு தங்க நாணயமும் பிரிச்சுக்கறதுதான் சரியானதா இருக்கும்னு சொன்னான். அதுக்கு முதல் வழிப்போக்கன் நாம சப்பாத்தியை சரி சமமாகத்தான் பிரிச்சுக்கிட்டோம் அதே போல இதையும் சரி சமமா பிரிச்சுக்கறதுதான் சரியானதா இருக்கும்னு சொன்னான். இவங்களுக்குள்ள இந்த விவாதம் பெருசாகி ரெண்டுபேருல யாருமே விட்டுக்கொடுக்காம கடைசியில மூணு சப்பாத்தி வச்சிருந்த வழிப்போக்கன் இந்த விவகாரத்தை நீதிமன்றத்துல தீர்த்துக்கலாம் அங்கதான் சரியான நீதி கிடைக்கும்னு சொல்ல ரெண்டு பேரும் நீதிமன்றத்துக்கு போனாங்களாம்.

நீதிமன்றத்துல வழக்கை விசாரிச்ச நீதிபதி ஐந்து சப்பாத்தி வச்சிருந்தவனுக்கு ஏழு பவுன் தங்க நாணயமும் மூணு சப்பாத்தி வச்சிருந்தவனுக்கு ஒரு பவுன் தங்க நாணயமும் கொடுக்கணும்னு தீர்ப்பு சொன்னாராம். ஐந்து சப்பாத்திக்காரனுக்கு உள்ளுக்குள்ளே சந்தோஷமா இருந்தாலும் நீதிபதி எப்படி இந்த முடிவுக்கு வந்தார்னு தெரிஞ்சக்க ஆர்வமாயிடுச்சி. மூணு சப்பாத்திகாரனோ இது நீதியில்லை இது நேர்மையில்லை இது தர்மமில்லைன்னு புலம்ப ஆரபிச்சுட்டான். ரெண்டு பேரும் தீர்ப்புநகலை வாங்கிப் படிச்சாங்க அதுல நீதிபதி, ''ஐஞ்சு சப்பாத்தி வச்சிருந்தவன் சப்பாத்தியை தலா மூணு துண்டா போட்டு மொத்தம் 15 துண்டுகளும், மூணு சப்பாத்தி வச்சிருந்தவனுடைய சப்பாத்திகளில் இருந்து 9 துண்டுகளும் கிடைச்சது.

அந்த 15 துண்டுகள்ல ஐந்து சப்பாத்திக்காரன் சாப்பிட்ட 8 துண்டு சப்பாத்தி போக மீதமிருந்தது 7 துண்டுகள். அதேபோல 9துண்டுகள்ல இருந்து மூணு சப்பாத்திக் காரன் திண்ண 7 துண்டுகள் போக மீதமிருந்தது ஒண்ணு. ஆக 5 சப்பாத்திக்காரன் தன்னுடைய சப்பாத்தியில இருந்து பணக்காரனுக்கு 7 துண்டுகளும் மூணு சப்பாத்திக்காரன் ஒரு துண்டும் கொடுத்திருக்காங்க அதனால 5 சப்பாத்திக்காரனுக்கு 7 பவுன் தங்க நாணயங்களும் 3 சப்பாத்திக்காரனுக்கு ஒரு பவுன் தங்க நாணயமும் கொடுக்கணும்னு தீர்ப்பு எழுதியிருந்தாராம்.

இந்த தீர்ப்பை படிச்ச மூணு சப்பாத்திக்காரன் இந்த வழக்கை மேல் முறையீடு செஞ்சான் சுப்ரீம் கோர்ட்டுல கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்பை படிச்ச நீதிபதிகள், கீழமை கோர்ட் நீதிபதி சொன்ன தீர்ப்பு சரிதான்னு ஒத்துகிட்டாங்க. இருந்தாலும் இந்த எட்டு பவுன் தங்க நாணயங்களும் பரிசுப்பொருளா வந்ததுனால அந்த எட்டுபவுன் நகையில 30 சதவீதம் ஜிஎஸ்டியா கட்டணும் மற்றும் இந்த வழக்கு நடத்தறதுக்கு ஆன செலவையும் ரெண்டு பேருக்கிட்டே இருந்து வசூலிக்கணும்னு உத்தரவு போட்டார்களாம். இப்போ மூணு சப்பாத்திக்காரனுக்கு கீழமை நீதிமன்றம் உத்தரவு போட்ட ஒரு பவுன் தங்கக்காசும் ஜிஎஸ்டி மற்றும் வழக்கு தொகையாக போயி மேலும் அவன் பணம் கட்ட வேண்டி வந்ததாம். ஐந்து சப்பாத்திக் காரனுக்கு ரெண்டரை பவுன் நகை மேலும் குறைஞ்சுதாம். இப்படித்தான் நம்முடைய உரிமைகளைக் கேட்டு போகிற பெரும்பான வழக்குகள் ஆகிவிடுகிறது.

இந்தக் கதை ஒரு சின்ன உதாரணம் தான் நம்முடைய உணர்வுகளும், உரிமைகளும் வேற வேற அதை சட்டப்படியா தீர்க்கறதுல அரசாங்கத்துடன் நமக்குள்ள அணுகுமுறையும், நீதிமன்றங்களுக்கு உள்ள அணுகுமுறையும் வேற வேற.'' நான் சொன்ன இந்தக்கதையை கேட்ட தோழர் முகத்தில கொஞ்சம் தெளிவு தெரிஞ்சுது இனிமே அவரை போராட்ட களத்துக்கு நான் கூப்பிட வேண்டியதில்லை.

இந்த மாத முத்தாய்ப்பு கவிதை மாத ஊதியம் பெறும் அரசு ஊழியர்களைப் பற்றியது.

**சம்பள வர்க்கம்**

முதல் தேதியின்
சக்கரவர்த்திகள்!
மாத நடுவின்
மன நோயாளிகள்!
கடைசி வாரத்தின்
தத்துவ ஞானிகள்!



# வீறு கொண்டு எழு! பெண்ணே!

– தெ.வாசுகி

"ஆடை, அணிகலன்கள்,
ஆசைக்கு வாசமலர் தேடுவதும்,
ஆடவர்க்குச் சேவித்திருப்பதுவும்,
அஞ்சுவதும், நாணுவதும்,
ஆமையைப்போல் வாழுவதும்,
கெஞ்சுவதுமாகக் கிடக்கும்
மகளிர் குலம்
மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஓர் பகுதி"

என்கிறார் பாரதிதாசன், இந்த உலகில் ஆணுக்கு பெண் சமம், பெண் சுயமரியாதையாக வாழ்வதற்கு உரிமை உண்டு. காலம் காலமாக ஆணாதிக்க சமுதாயத்தில் ஊறிக்கிடந்த பெண்குலம் தனக்கான உரிமைகள் குறித்து விழிப்புணர்வு கொள்ளாத போது பெண் உரிமைகள் குறித்து ஆண்களிடம் பேசுவது என்பது பாலின சமத்துவத்திற்கு தீர்வாகாது.

ஆண்களுக்கு நிகராக பெண்களும் இன்று பல்வேறு துறைகளில் சாதித்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் கருக்கொலை, சிசுக்கொலையில் தொடங்கி குழந்தைத்திருமணம் வரதட்சினைக் கொடுமை, கணவருடன் உடன்கட்டை ஏறுதல் போன்ற அபாயங்களை எதிர்கொண்டுதான் பெண் இன்றைய நிலையை கடந்திருக்கிறாள். சமூகத்தில் இன்னும் கடக்க வேண்டிய பாதை என்பது வாழ்வுரிமை, கல்வி பெறும் உரிமை, சத்தான உணவு, மருத்துவ வசதி பெறுவது, சொத்துரிமை கோருவது என ஒவ்வொன்றுக்கும் உலகின் ஏதோ மூலையில் இந்த நொடிப்பொழுதிலும் பல பெண்கள் தங்கள் உரிமைக்காக போராடிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

**கோவிட் பெருந்தொற்றும் குடும்ப வன்முறையும்**

கொரோனா பெருந்தொற்று காலம் பெண்களுக்கு எதிரான பல விஷயங்களை அம்பலப்படுத்தியுள்ளது. கொரோனாவால் பல நாடுகளில் பொருளாதார வளர்ச்சி பாதியாக குறைந்திருக்கிறது. இந்த பெருந்தொற்று காலத்தில் உலகம் முழுவதும் ஆண்களைவிட பெண்களே அதிகபடியான வேலை இழப்பை சந்தித்திருக்கிறார்கள்.

பாலின பாகுபாடு இந்த வேலை இழப்பிலும் முக்கியப் புள்ளியாக அமைந்துள்ளது. உலகம் முழுவதும் 4.7 கோடிக்கும் அதிகமாக பெண்கள் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். சம்பளக்குறைவு அளவுக்கதிமான வீட்டுவேலை காரணமாக சுமார் 43 சதவீகிதம் பெண்கள் பதற்றம் மற்றும் மன அழுத்தத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று சர்வதேச தொண்டு நிறுவனமான ஆக்ஸ்பாம் தெரிவிக்கிறது.

பலவீனமான சமூக பாதுகாப்பு அமைப்புகள் பலபெண்களை பாதுகாப்பற்ற நிலையில் தள்ளியுள்ளன. குறிப்பாக உழைக்கும் பெண்கள் மீண்டும் வறுமை நிலைக்கு கீழே தள்ளப்பட்டுள்ளார்கள். மூன்று வேளை உணவு பல வீடுகளில் இரண்டு வேளையாக மாறிவுள்ளது. இதில் பெண்கள் பட்டினியை

நோக்கி தள்ளப்பட்டுள்ளனர். வறுமையும் வேலை நிரந்தரமின்மையும் பெண்களை தொடர்ந்து துரத்திக்கொண்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக தொழில்துறையில் அவர்களின் பங்கேற்பை குறைத்திருக்கிறது

**அமெரிக்கா- பெண் உரிமையின் மீது தாக்குதல்**

அமெரிக்காவில் கடந்த 50 ஆண்டுகளாக பெண்களின் தனிப்பட்ட அடிப்படை உரிமையாக இருந்த கருக்கலைப்புச் சட்டத்தை அந்நாட்டின் உச்ச நீதிமன்றம் புரட்டிப்போட்டிருக்கிறது. கருக்கலைப்பு பெண்ணின் தனிப்பட்ட உரிமை என்று 1973 ஆம் ஆண்டு அமெரிக்க உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. சட்டம் நிறைவேற்றப்பட்டு 50 ஆண்டுகளுக்கு பிறகு கருக்கலைப்பு உரிமை சட்டத்தை அந்நாட்டு உச்ச நீதிமன்றம் ரத்து செய்துள்ளது. இத்தீர்ப்பை தொடர்ந்து அமெரிக்காவில் 13 மாகாணங்கள் கருக்கலைப்பு தடைச்சட்டத்தை இயற்றியுள்ளன. அமெரிக்காவில் பணிபுரியும் பெண்களிடையே பெரும் அதிர்ச்சியையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

**ஈரான்- பெண்களின் உரிமைப் போராட்டம்**

முறையா ஹிஜாப் அணியவில்லை என ஈரானின் ஆடை ஒழுங்குமுறை காவல் துறையால் கைது செய்யப்பட்ட 23 வயது மாஸா அமினி கடுமையாக தாக்கப்பட்டு கோமா நிலையில் உயிரிழந்தார். அதனால் கோபமடைந்த ஈரானிய பெண்கள் ஹிஜாபை கழற்றியெறிந்து போராட்டத்தில் குதித்தனர். போராடும் பெண்களுக்கு ஆதரவாக சமூக செயற்பாட்டாளர்கள் கலைஞர்கள் போராடினார்கள். ஈரான் அரசு போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச்சூடு, கைது, மரணதண்டனை போன்ற அடக்கு முறைகள் ஏவப்பட்டது. எனினும் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தங்களின் விடியலுக்காக போராடும் ஈரான் பெண்கள் சிறைக்குச் செல்லவும், இறக்கவும் கூட துணிகின்றனர்.

**ஈராக் - வன்கொடுமைக்கெதிரான போராட்டம்**

ஈராக்கில் குடும்ப வன்கொடுமைகளை அனுபவிக்கும் பெண்கள் தங்களுக்கான தீர்வாக உடலில் தீவைத்துக்கொள்ளும் அவலம் நடந்தேறிவருகிறது. பெண்கள் தாங்கள் விரும்பும் படிப்பையோ, அல்லது சாதிப்பதையோ நினைத்துப்பார்க்க முடியாத நிலை. மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் பெண்கள் பல கொடுமைகளை அனுபவித்து மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். அதிலிருந்து விடுதலைகிடைக்காதபோது தன்உடலில் தீவைத்து தன்னை மாய்த்துக்கொள்ள துணிகின்றனர். 17 மற்றும் 16 வயதுக்கும் குறைவான பெண்களும் அடங்குவர். அந்நாட்டில் பெண்களுக்கான விழிப்புணர்வு இன்மையை காட்டுகிறது எனவும், பெண்களுக்கெதிரான வன்கொடுமைகள் இயல்பாகிவிட்டதென நிபுணர்கள் கூறுகின்றனர். உலக அளவில் குடும்ப வன்முறை அதிகம் உள்ள நாடுகளில் ஈராக்கும் உள்ளது என்கிறது பிபிசி செய்தி அறிக்கை.

**மாதவிடாய் விடுப்பு வழங்கும் நாடுகள்**

பாலின சமத்துவத்தை முன்னிறுத்தி பெண்களின் சுகாதார நலனையும் ஒருங்கிணைத்து பேறுகாலம் மற்றும் மாதவிடாய் காலங்களில் பெண்களுக்கு விடுப்பு வழங்கும் நடைமுறையை ஜப்பான், இந்தோனேசியா, தென்கொரியா , ஜாம்பியா போன்ற ஒருசில நாடுகள் மட்டுமே கடைப்பிடிக்கிறது. இந்நிலையில் ஐரோப்பாவிலுள்ள ஸ்பெயினில் பிரதமர் பெட்ரோ கான்செஸ் தலைமையிலான சோசலிச அரசு ஆட்சிசெய்கிறது. அந்நாட்டில் பெண் ஊழியர்களுக்கு ஊதியத்துடன் கூடிய மாதவிடாய் விடுமுறை வழங்கும் ஐரோப்பாவின் முதல்நாடாக ஸ்பெயின் விளங்குகிறது.

**உலக பெண்ணுரிமை மாநாடுகள்**

உலக பெண்ணுரிமை மாநாடுகள் இதுவரை நான்கு முறை நடைபெற்றுள்ளது. முதல் மாநாடு 1975ல் மெக்சிகோவில் நடைபெற்றது. இம்மாநாட்டில் தான் உலக மகளிர் தினம் அறிவிக்கப்பட்டது. 2ஆம் மாநாடு கோபன்கேகனில் நடைபெற்றது. இம்மாநாட்டில் பாலின சமத்துவம் பெண்களின் வளர்ச்சி மற்றும் அமைதியை

ப்ரகடனப்படுத்தியது. 3ஆம் மாநாடு 1985ல் நைரோபியில் நடைபெற்றது. இம்மாநாட்டில் கடந்த மாநாட்டின் சாதனைகளை மதிப்பாய்வு செய்வதற்கும் உலக முழுவதும் சமத்துவம் வளர்ச்சி மற்றும் அமைதியை வலியுறுத்துவதாக அமைந்தது. 4ஆம் மாநாடு 1995ல் பெய்ஜிங்கில் நடைபெற்றது. இம்மாநாட்டில் பாலின சமத்துவத்திற்கான மற்றும் பெண்கள் முன்னேற்றத்திற்கான 12 முக்கிய அறிவிப்புகளை பிரகடனப்படுத்தியது. இம்மாநாட்டில்தான் சிறுமிகளுக்கான முதல் பிரகடனம் வறையறுக்கப்பட்டது. ஐ.நா.சபை பெண்குழந்தை நாளுக்கான தீர்மானத்தை அறிவித்தது. பெய்ஜிங் மாநாட்டில் பெண்களை பாதுகாப்பதற்காக உறுதி மொழி எடுத்த அனைத்து நாடுகளும் 25 ஆண்டுகளாகியும் மிககுறைந்த விழுக்காடு மட்டுமே நிறைவேற்றியுள்ளது என்பது வேதனைக்குறியதாகும்.

மேலும், உலக அளவில் மனித வர்த்தகம் என்ற வன்கொடுமையில் 70 சதம் பெண்களும், சிறுமிகளும் பாதிப்புக்குள்ளாகின்றனர். 15 வயதுக்குட்பட்ட பெண்களில் 20ல் ஒருவர் பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாகி இருக்கின்றர். பெண்கள் பொதுவாழ்வில் காலடி எடுத்து வைக்கும் போது அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க சமுதாயம் தவறிவிட்டது மேலும், கல்விக்கூடங்களில் மட்டுமல்லாமல் குடும்பங்களிலும் பெண்கள் பல வழிகளில் வன்முறைகைளைச் சந்திக்கின்றனர். குழந்தை திருமணம், பெண்உறுப்பு சிதைவு போன்ற கொடுமைகள் இன்றும் தொடர்கின்றன என யுனிசெப் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

#### பெண்ணுரிமை போற்றும் மாநிலங்கள்

கேரள மாநிலத்தில் ஜவுளிக்கடைகளில் பணிபுரியும் பெண்கள் சுத்தமான கழிப்பறை வசதி இல்லையென்றும் பல மணிநேரம் நின்றுகொண்டு பணி செய்வதால் கால் வீக்கத்தாலும் சிறுநீர் பாதை தொற்றுக்களாலும் அவதியுறுவதாக பெண்கள் கேரளா முழுவதும் போராட்டம் நடத்தியதன் விளைவாக கேரள கடைகள் மற்றும் வணிக நிறுவன சட்டத்திருத்தம் கொண்டுவந்து பணிபுரியும் இடங்களில் பாலியல் சுரண்டலை தடுக்கவும், உட்கார்ந்து பணிபுரியும் உரிமையும் பெற்றுள்ளனர். பெண்களின் ஒன்றுபட்ட போராட்டத்தின் வெற்றியாகவும் இடதுசாரி கேரள அரசு என்பதால் சாத்தியமாயிற்று. இச்சட்டம் இந்தியாவிற்கே வழிகாட்டுதலாக அமைந்துள்ளது.

தமிழ்நாட்டில் தி.மு.க.அரசு ஆட்சிப் பொறுப் பேற்றவுடன் 2021 மே மாதம் முதல் தமிழ்நாட்டில் அனைத்து மகளிருக்கும் உள்ளூர் பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணிக்கும் அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இதுவரை தமிழ்நாட்டில்115 கோடி பெண்கள் பயன்பெற்றதாக தரவுகள் தெரிவிக்கின்றன. இத்திட்டத்தால் பெண்கள் ஏழை எளிய பெண்கள் பொதுவெளியில் பயணிப்பதும் பொருளாதார ரீதியாக முன்னேறுவதும் அதிகரித்துள்ளது. மேலும் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களுக்கு 12 மாதங்கள் மகப்பேறு விடுப்பு வழங்கி தாய் மற்றும் சேய் நலத்திற்கு முன்னுரிமை அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

#### விசாகா அமைப்பும் பாலியல் துன்புறுத்தல் சட்டமும்

இராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த அரசாங்க சமூக பணியாளரான பன்வாரிலால் தேவி என்பவர் குழந்தை திருமணங்களை தடுக்க முயன்றார் என்பதற்காக நான்கு பேர்கொண்ட கும்பலால் கூட்டுபாலியல் வன்புணர்வுக்கு ஆளாகினார். இவரின் புகார் மீது உரிய நீதி கிடைக்காததால் உச்சநீதிமன்றத்தில் ரிட்மனு தாக்கல் செய்தார். 1997 ஆகஸ்ட் 13 ஆம் தேதி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த வழங்கில் உச்ச நீதிமன்றம் அளித்த வழிகாட்டு நெறிமுறைகள்தான் விஷாகா நெறிமுறைகள் என்றழைக்கப்பட்டது. 2013ல் பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தலுக்கு எதிராக சட்டம் இயற்றும் வரை வழிகாட்டியாக அமைந்தது.

#### பெண்களின் மீது வன்முறைக் குற்றங்கள்

பெண்களுக்கெதிரான வன்முறைக் குற்றங்களில் அதிக எண்ணிக்கை 59,853 வழக்குகள் உத்தரபிரதேசத்தில் பதிவாகியுள்ளது. அதைத் தொடர்ந்து இராஜஸ்தான் 41,550 வழக்குகளும் (10.2%) மகாராஷ்டிரா 37,44

வழக்குகளும் (9.3%) பதிவாகியுள்ளது. ராஜஸ்தானில் பாலியல் வன்புணர்வு குற்றங்கள் 5997 வழக்குகள் பதிவாகியுள்ளன, மேலும், பெண்கள் மற்றும் பெண்குழந்தைகளுக்கு எதிரான வன்முறை குற்றங்களில் போக்சோ சட்டத்தின் கீழ் 7444 வழக்குகளுடன் உத்தரபிரதேசம் முன்னிலையில் இருக்கிறது. பாலியல் வன்புணர்வு குற்றங்களில் 18 சதவீதம் பட்டியலின பெண்கள் அடங்குவர். அதிக வரதட்சணை வழக்குகள் ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு 2,410 என பதிவாகியுள்ளது. அதற்கு அடுத்ததாக பீகாரில் 1,120 என பதிவாகியுள்ளது. பெண்கள் மீது அமிலத் தாக்கதல்களில் பதிவான வழக்குகளில் உத்தரபிரதேசம் முன்னிலையில் இருக்கிறது. இந்தியாவின் தலைநகர் டெல்லி பெண்களுக்கு பாதுகாப்பற்ற இடமாக உள்ளது. ஒட்டுமொத்தமாக நாம் வாழும் இந்தியா பெண்கள் வாழ தகுதியற்ற நாடாக உள்ளது.

**வீணடிக்கப்படும் நிர்பயா நிதி**

2012ல் டெல்லியில் நிகழ்ந்த கூட்டுப்பாலியல் வல்லுறவு சம்பவத்தை தொடர்ந்து பெண்களின் பாதுகாப்புக்காக "நிர்பயா நிதி" திட்டத்தை 2013ல் மத்திய அரசு அறிவித்தது. இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி முறையாக மாநிலங்களால் முறையாக செலவிடப்படவில்லை. உச்சநீதிமன்றம் தலையிட்ட பிறகு நிர்பயா நிதியில் ரூ,2000/- கோடி செலவிடப்படாமல் வீணடிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. 2021 மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் மாநிலங்களுக்கு 60:40 என்றும் நிலபரப்பில் பின்தங்கிய மாநிலங்களுக்கு 90:10 என்ற அளவிலும் சிறப்புத்திட்டமாக 100% நிதியும் ஒதுக்கப்படுவதாகவும்,இந்த நிதியை சில மாநிலங்கள் நிதி பெறாமல் இருப்பதும் சில மாநிலங்கள் நிதி செலவழிப்பதில் சுணக்கம் காட்டி வருவதும் தெரிய வந்துள்ளது. பெண்களுக்கெதிரான குற்றங்கள் அதிகம் நிகழும் டெல்லியில் 2018-19 நிதியாண்டில் ஒரு பைசா கூட செலவிடப்படவில்லை என்பது அதிர்ச்சியான தகவலாக உள்ளது. இவற்றை பார்க்கும்போது பெண்ணின் பாதுகாப்பு என்பது கேளவிக்குறியாகத்தான் உள்ளது.

**இந்திய அரசியலில் பெண்கள் நிலை**

சுதந்திரத்திற்கு பின் இந்தியாவில் வகுக்கப்பட்ட அரசியல் சாசனம் என்பது ஜனநாயக நாட்டில் அனைவரும் சமம் என்கிற நிலை மாறி ஆணாதிக்க சமூகத்தை கட்டமைத்துக் கொண்டிருக்கிறது. பாலின இடைவெளி குறியீட்டு மதிப்பீடு 0.629 ஆகவும், இதனால் பாலின சமத்துவம் குறித்த உலக நாடுகளின் வசையில் நமது இந்திய 146 நாடுகளில் 135 ஆம் இடத்தையும் பெற்றுள்ளது. இந்திய அரசியலில் அனைத்து நிலைகளிலும் பெண்களுக்கு 33 சதம் இட ஒதுக்கீடு அளிக்கும் மகளிர் மசோதா 2010 ல் இறுதியாக இராஜ்யசபாவில் நிறைவேற்றப்பட்டு இது இன்னும் பாராளுமன்றத்தின் மக்களவையில் நிறைவேற்றப்படாமல் உள்ளது. லோக் சபாவில் பெண்கள் 11.8% அதாவது 542 உறுப்பினர்களில் 64 உறுப்பினர்கள் மற்றும் ராஜ்யசபாவில் 245 உறுப்பினர்களில் 27 உறுப்பினர்களை மட்டுமே கொண்டுள்ளது. மொத்தம் 18.5% பெண் அமைச்சர்களின் எண்ணிக்கையில் இந்தியா 88 ஆம் இடத்தில் உள்ளது.

**வீறுகொள் பெண்ணே !**

உலக மகளிர் தினத்தினை கார்ப்பரேட் நிறுவனங்கள் பெண்களை வணிக நுகர்வு சந்தையாக மாற்றிக் கொண்டிருக்கும் வேளையில், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஒவ்வொரு வருடமும் உலக மகளிர் தினத்தினை உழைக்கும் வர்க்கப் பெண்களின் உரிமைகளை எடுத்துக்கூறும் விழிப்புணர்வு கருத்தரங்களை தொடர்ந்து நடத்தி வருகிறது. இந்திய திருநாட்டில் பெண்களுக்கான சமூக சீர்திருத்தம் என்பது முழுமையாக நிறைவேறவில்லை. இந்நிலைமாற வேண்டும்.

இளம் பெண்கள், பெண்குழந்தைகளின் கல்வியை ஊக்குவிக்கவும், குழந்தை திருமணங்களுக்கு எதிராகவும், பாலின உழைப்புச் சுரண்டலுக்கு எதிராகவும், சாதி, மத, பாலின அடிப்படையிலான வர்க்கபேத ஏற்றத் தாழ்வுகளுக்கு எதிரான சமத்துவத்திற்கான சமுதாயத்தை படைக்க, பெண் விடுதலைக்காக வீறுகொண்டு எழு பெண்ணே ! ●

கட்டுரை

# தொழிலாளர் ஓய்வூதிய சட்டம் – 95 வரலாறும், பின்னணியும்

**- இரா.மங்களபாண்டியன்**

தொழிலாளர்களும் தொழிற்சங்கமும் தொடர்ந்து போராடியதன் விளைவாகவும் உச்சநீதிமன்றத்தில் திரு.நகாரா அவர்கள் தொடுத்த வழக்கில்,''ஓய்வூதியம் என்பது கருணையினால் வழங்கப்படுவதில்லை, அது தொழிலாளர்கள் உரிமை'' என்று தீர்ப்ப அளித்தன் விளைவாகவும், ''தொழிலாளர் ஓய்வூதியதிட்டம் 95'' என்ற (EMPLOYEES PENSION SCHEME 95) திட்டத்தை 1995 நவம்பர் 16 அன்று அப்போதைய பிரதமர் பி.வி.நரசிம்மராவ் அறிமுகம் செய்தார்.

நாடாளுமன்றத்தின் மூலம் உருவாக்கப்பட்ட வருங்கால வைப்புநிதி திட்டம், உருவாக்கப்பட்ட வருங்கால வைப்புநிதி திட்டம் 1952 சட்டத்தின் ஒரு பகுதியான பென்சன் திட்டத்தை கொண்டுவரும் போது நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள் கருத்துக்களை கேட்காமலும், எந்த விவாதமும் இல்லாமலும் இ.பி.எஸ்.1995 திட்டத்தை அவசர கதியில் அரசு 1.16% பங்களிப்பும் தொழிலாளி தனது பங்களிப்பாக, நிர்வாகம் செலுத்தும் வருங்கால வைப்பு நிதியின் பங்களிப்பான 12% லிருந்த 8.33% ஐ பென்ஷன் நிதிக்காக செலுத்த வேண்டும்.

வருங்கால வைப்பு நிதி சட்டம் 1952 மற்றும் குடும்ப ஓய்வூதிய திட்டம் 1971, ஆகிய இரண்டு திட்டங்களில் உள்ளதை சிஐடியு சுட்டிக்காட்டியது. ஆனால் ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் இந்த திட்டத்தை 10 ஆண்டுகளுக்;கு ஒரு முறை பரிசீலிக்கப்படும் என்று உறுதியளித்ததை மற்ற சங்கங்கள் ஏற்றுக் கொண்டன. ஆனால் கடந்து 26 ஆண்டுகளில் எந்த முன்னேற்றமும் செய்யவில்லை.

**உச்சநீதிமன்றத்தில் அளித்த வாக்குறுதிகள் பறிப்பு**

இபிஎஸ் 95-திட்டத்தில் தொழிலாளி சேர்வதற்கான விருப்பத்தை கேட்காமல் சேருவதற்கு கட்டாயப்படுத்த கூடாது என்று சி.ஐ.டி.யு. சங்கம் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது. ஒன்றிய அரசு இ.பி.எஸ்.-95 திட்டம் ஒரு சிறந்த சமூகநல பாதுகாப்பு திட்டம் என்றும், இதில் பென்ஷன் மட்டுமல்ல, தொழிலாளி விரும்பினால்1/3 பென்ஷனை விட்டு கொடுத்து (COMUTATION SCHEME) தனது பங்களிப்பில் ஒரு பகுதியை பெற்றுக் கொள்ளலாம் என்றும்,''போட்ட முதலீடு திரும்ப கிடைக்கும்''( RETURN OF CAPITAL) என்ற பெயரில் 20 ஆண்டுக்கு பிறகு அவரது பென்ஷனை போன்று 100 மடங்கு தொகையைத் திரும்ப பெற்றுக் கொள்ளலாம் என்றும், மேலும் காப்பீட்டுத் திட்டம் உள்ளது என்றும் உச்சநீதிமன்றத்தில் வாதிட்டது. உச்சநீதிமன்றமும் ஒன்றிய அரசின் வாதங்களை ஏற்றுக்கொண்டு தொழிலாளர்கள் மனுவை தள்ளுபடி செய்தது.

ஆனால் இந்த திட்டத்தில் உள்ள சிறப்பு அம்சங்கள் என்று உச்சநீதிமன்றத்தில் தெரிவித்த எல்லா அம்சங்களையும் 2008-ல் ஒன்றிய அரசு தன்னிச்சையாக ரத்து செய்தது.

இபிஎஸ்95 திட்டத்தில் உள்ள10(2) ஷரத்தின் படி வழங்க வேண்டி 2 ஆண்டுகளுக்கான பணிக்கால உயர்வு (SERVICE WEIGHTAGE) என்ற கூடுதல் தொகையை 2013 வரை வழங்கவில்லை. இ.பி.எஸ். பென்ஷனர்கள் நீதிமன்றங்களுக்க சென்று வழக்கு தொடுத்த பிறகு 2015-ல் தான் சட்டத்தில் உள்ள உரிமையை வழங்கியது.

இ.பி.எஸ். 95 திட்டத்தில் 1/3 பங்கு பென்சனை விட்டுக்கொடுத்து கம்யூடேசன் செய்தவர்களுக்கு 100 மாதம் தொகையை முன்பணமாக அளித்து விட்டு 100 மாதம் முடிந்த பிறகும் அவர்கள் ஆயுட்காலம் முழுவதும் 1/3 தொகையை பிடித்தம் செய்து வந்தது. இ.பி.எஸ். பென்ஷனர்களின் தொடர் போராட்டத்தின் காரணமாகவும்,மத்திய வாரியக் கூட்டங்களில் வலியுறுத்தப்பட்டாலும் 2020 பிப்ரவரியில் 180 மாதம் முடிந்தவர்களுக்கு முழுபென்ஷன் வழங்கப்படும் என்று உத்தரவு பிறப்பித்தது.

**குறைந்த பட்ச பென்ஷனாக ரூ.1000 கூட பெற முடியாத அவலம்**

இ.பி.எஸ்.பென்ஷனர்களின் தொடர் போராட்டத்ற்கு பிறகு மத்தியில் ஆட்சியிலிருந்த மன்மோகன்சிங் அரசு குறைந்தபட்ச பென்ஷனை அமல்படுத்த பா.ஜ.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் பகத்சிங் கோஷாரியா தலைமையில் ஒரு குழுவை அமைத்து அனைத்து தரப்பு கருத்துக்களையும் கேட்ட குழுவின் தலைவர், தொழிலாளி செலுத்துவது போன்று ஒன்றிய அரசும் தனது பங்காக பென்ஷன் நிதிக்கு 8.33% பங்களிப்பு செலுத்த வேண்டும் என்றும் பென்ஷன் தொகைக்கு செலுத்தப்படும் சம்பள வரம்பை ரூ.6500/- லிருந்து ரூ.15000/-மாக உயர்த்த வேண்டும் என்றும் குறைந்த பட்ச பென்ஷனாக இடைக்கால நிவாரணமாக ரூ.3000 வழங்கப்பட வேண்டும் என்றும், பென்ஷனை பஞ்சப்படியுடன் இணைக்க வேண்டும் என்றும் 2013-ல் ஒன்றிய அரசிற்க பரிந்துரை செய்தார். அதன் அடிப்படையில் குறைந்தபட்ச பென்ஷனாக ரூ.1000/- மட்டும் 01/04/2014 முதல் வழங்குவதற்கு மன்மோகன்சிங் தலைமையிலான ஒன்றிய அமைச்சரவை 2013 மார்ச் மாதம் ஒப்புதல் அளித்தது.

2014 மே மாதம் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்த மோடி தலைமையிலான ஒன்றிய அரசு 01/04/2014 என்பதற்கு பதில் 01/09/2014 முதல் குறைந்தபட்ச பென்ஷன் ரூ.1000/- வழங்க உத்தரவிட்டது.

ஆனால் இ.பி.எஸ். திட்டத்தின் அடிப்படையில் 50 முதல் 57 வயது வரையில் உள்ள குறைக்கப்பட்ட பென்ஷன் வாங்குபவர்களுக்கு ரூ.1000/- வழங்கப்படுவதில்லை.

இதனால் இந்தியா முழுவதும் உள்ள 70 லட்சம் பென்ஷனர்கிளல் இன்றும் 30 லட்சம் பேருக்கு மேல் ரூ.1000/-க்கும் கீழ்தான் பென்ஷன் பெறுகின்றனர்.

**உயர்த்த மறுக்கும் ஒன்றிய அரசு**

நமது தமிழகத்தை சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்ற மாநில நாடாளுமன்ற உறுப்பினர்களும் தொடர்ந்து நாடாளுமன்ற கூட்டங்களில் இ.பி.எஸ். பென்ஷனர்களின் குறைந்தபட்ச பென்ஷன் உயர்வு உட்பட பல்வேறு கோரிக்கைகளை அமல்படுத்திட பலமுறை ஒன்றிய அரசை வலியுறுத்தி வந்துள்ளார்கள்.

அதன் அடிப்படையில் ஒன்றிய அரசு இ.பி. எஸ். பென்ஷனர்களின் கோரிக்கைகளை பரிசீலனை செய்வதற்கு உயர் அதிகாரக் கண்காணிப்பு குழு ஒன்றை 2018-ல் அமைத்தது. அந்த குழு தனது பரிந்துரைகளை 2019-லர் அளித்தது. அதில் குறைந்தபட்ச பென்ஷனை உயர்த்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது

மத்திய அறங்காவலர் குழு(CBT) குறைந்தபட்ச பென்ஷனை ரூ.3000/- ஆக உயர்த்தவும், ஒன்றிய தொழிலாளர் துறை அமைச்சர் குறைந்தபட்ச பென்ஷனை ரூ.2000/- ஆக உயர்த்த 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் இரண்டு முறை பரிந்துரை செய்துள்ளனர்.

இ.பி.எஸ். திட்டத்தில் உள்ள ஷரத்து 13(1)-ன் அடிப்படையில், பென்ஷன் நிதிக்கு அடிப்படை சம்பளத்தின் உச்சவரம்பின்றி முழு சம்பளத்திற்கு 8.33% பங்களிப்பு அளிக்க விருப்பம் தெரிவித்தால் அதன் அடிப்படையில் தொழிலாளியின் முழு சம்பளனத்திற்கு பென்ஷன் கணக்கிடப்பட்டு வழங்கப்படும் என்பதை இ.பி.எப். நிர்வாகம் அமல்படுத்தவில்லை.

இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து வெற்றி பெற்ற பிறகு, தங்களது சம்பளத்திற்கான 8.33% பங்களிப்பை 1955 நவம்பர் முதல் வட்டியுடன் பி.எப். நிறுவனம் கணக்கிட்டு தெரிவிக்கும் தொகையை செலுத்தி முழு சம்பளத்திற்கு பென்ஷன் பெற்றுக் கொள்ளலாம் என்று 27/03/2017-ல் சுற்றறிக்கை வெளியிட்டது.

31/05/2017 உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையல் வெளியிட்ட 27/03/2017 சுற்றிக்கையை இ.பி.எப். நிர்வாகம் திரும்ப பெற்றது. இதனை எதிர்த்து பல்வேறு அமைப்புகளால் உயர்நீதிமன்றங்களில் வழக்க தொடு;க்கப்பட்டு அனைத்து உயர் நீதிமன்றங்களும் பென்ஷனர்களுக்கு சாதகமாக தீர்ப்புகள் வழங்கின. ஆனால் இ.பி.எப். நிர்வாகம் உயர்நீதிமன்ற தீர்ப்புகளை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. அதனையும் உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அதனை ஏற்க மறுத்த இ.பி.எப். நிர்வாகமும், ஒன்றிய அரசும் இணைந்து உச்சநீதிமன்றத்தில் மறு சீராய்வு மனுவை தாக்கல் செய்தன. தற்போது அந்த மனு 3 நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது.2020 மார்ச் மாதம் முதல் உயர் பென்ஷசன் வழங்குவதை முன் அறிவிப்பின்றி நிறுத்தியது அரசு.

**திருத்தங்களும் பாதிப்புகளும்**

2014-ல் இ.பி.எஸ். திட்டதில் பென்ஷன் பங்களிப்புக்கான சம்பள உச்சவரம்பை ரூ.6500/-லிருந்து ரூ.15000/-மாக உயர்த்தியது. இதன் மூலம் இ.பி.எப்.க்கு வருவாயை அதிகரித்துக் கொண்டது.

ஆனால் பென்ஷன் சம்பளத்தை கணக்கிடும் போது முன்பிருந்த 12 மாத சராசரி சம்பளம் என்பதை 60 மாத சராசரி சம்பளம் என்று மாற்றியமைத்து பென்ஷன் தொகைகை குறைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. பென்ஷன் கணக்கிடும் காலத்தையும் 3 பிரிவுகளாக பிரித்து அதன் மூலம் பென்ஷன் தொகை குறைக்கப்பட்டது.

ஒன்றிய அரசின் தன்னிச்சையான இந்த முடிவுகளை எதிர்த்து பென்ஷனர்கள் தொடுத்த வழக்கில் கேரளா உயர்நீPதிமன்றம், ஒன்றிய அரசு 2014-ல் கொண்டுவந்த இந்த திருத்தங்களை ரத்து செய்து தீர்ப்பு வழங்கியது.

இ.பி.எஸ். திட்டத்தில் 2014-ல் கொண்டு வரப்பட்ட திருத்தத்தில் புதியதாக பணியில் சேர்பவர்களில் ரூ.15000க்கு மேல் சம்பளம் உள்ளவர்களுக்கு வருங்கால வைப்புநிதி பிடித்தம் செய்யப்படாது என்றும், பென்ஷன் திட்டமும் கிடையாது என்றும், திருத்தங்களை செய்துள்ளது. தொழிலாளி வருங்கால வைப்புநிதிக்கு செலுத்தும் 12% பங்களிப்பை 10% சதமாக குறைத்துக் கொள்ள அனுமதிப்பது. இ.பி.எஸ். துறட்டதடதில் உள்ளவர்கள் புதிய பென்ஷன் திட்டத்தில் (NPS) மாற்றி கொள்வதற்கான திட்டத்தையும் அறித்துள்ளது. இதுபோன்ற மாற்றங்களை அமல்படுத்துவதன் மூலம் வருங்கால வைப்பு நிதித்திட்டமும், அமைப்பும் இல்லாமல் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது மோடி அரசு.

**தமிழக அரசுக்கு வேண்டுகோள்**

இ.பி.எஸ். 95 பென்ஷனர்களுக்கு குறைந்தபட்ச பென்ஷனை ரூ.9000/-மாக உயர்த்த ஒன்றிய அரசை வலியுறுத்தி சட்டமன்றித்தில் தீர்மானம் நிறைவேற்றவும், கேரண மாநிலத்திலும் புதுச்சேரி மாநிலத்திலும் உள்ளது போன்று இ.பி.எஸ். பேன்ஷனர்களுக்கு மாநில அரசு வழங்கும் முதியோர் பென்ஷன் தொகையையும் சேர்த்து கேரள அரசு வழங்குவது போன்று இ.பி.எஸ். பேன்ஷனர்களுக்கு கூடுதலாக ரூ.1600/- வழங்கிடவும் தமிழக அரசின் நடவடிக்கையை எதிர்பார்க்கிறோம்

**ஒன்றிணைந்து போராடுவோம்**

வருங்கால வைப்புநிதி அமைப்பை சீர்குலைக்கும் ஒன்றிய அரசின் நடவடிக்கைகளை முறியடித்து இ.பி.எப்-ஐ பாதுகாக்க பென்ஷனர்களும், இன்றைய தினம் பணியிலிருக்கு தொழிலாளர்களும் இணைந்து போராட வேண்டியுள்ளது. ●

# உலகளாவிய மனித நிவாரணம் – ஒரு பார்வை

## – சிதம்பரம் இரவிச்சந்திரன்

2023இல் உலகில் வாழும் 23 பேரில் ஒருவருக்கு மனிதாபிமான உதவி தேவைப்படும் என்று ஐநா எச்சரிக்கிறது. இதற்காக முன்பு எப்போதும் இல்லாத சாதனையளவாக 51.5 பில்லியன் டாலர் உலகளாவிய கூடுதல் உதவி தேவை என்று ஐநா அறிக்கை கூறுகிறது. இது 2022இல் ஏற்பட்ட அதிதீவிர சூழல் சீரழிவுகளால் பாதிக்கப்பட்ட 339 மில்லியன் மக்களுக்கு அவசியமானது.

**சாபமான வரம்**

கடந்த ஆண்டை விட உதவி தேவைப் படும் மக்கள் எண்ணிக்கை 25 விழுக்காடு அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 65 மில்லியன் அதிக மக்கள் உயிர் வாழ அவசியமானது. 2023இல் இவர்கள் வாழ இந்த நிதி உதவும் என்று ஐநா மனிதாபிமான உதவி மற்றும் நிவாரணப் பணிகளுக்கான செயலகத்தின் ஒருங்கிணைப்பாளர் மார்ட்டின் கிரிபித்ஸ் (Martin Griffiths) கூறுகிறார். உதவியின் அளவு 2022இன் தொடக்கத்திலேயே முன்பிருந் ததை விட 25% அதிகரித்திருந்தது. கொடையாளர்கள் தாராளமாக நிதியுதவி செய்தாலும் தேவை அதிகம். ஐநா புள்ளிவிவரங்களின்படி 2019இல் நிவாரணம் தேவைப்படும் மக்கள் எண்ணிக்கை நூறு மில்லியனாக இருந்த போது உதவித்தொகை 132 பில்லியன் டாலர்கள். இன்று இது 339 பில்லியன் டாலர்களாக அதிகரித்துள்ளது. சோமா லியா, ஆப்கானிஸ்தான், ஏமன் போன்ற நாடுகளில் உள்ள உள்நாட்டு கலவரம் உள்ளிட்ட காரணங்களால் உணவுத் தட்டுப் பாடு கடுமையாக உள்ளது. இதனால் கோடிக்கணக்கான மக்கள் பட்டினி கிடக்கின்றனர். புவி வெப்ப உயர்வு பாகிஸ் தான் போன்ற நாடுகளில், வரமாக இருந்த பருவமழை சாபமாக (monsoon on steroids) மாறியுள்ளது.

**மூன்றாவது பெரிய நாடு**

காலநிலை மாற்றத்தால் பாதிக்கப் படும் மக்களின் வாழ்வாதாரத்திற்காகத் தேவைப்படும் நிதி குறித்த விவரங்களை “உலகளாவிய மனித நிவாரணம் ஒரு பார்வை ” (GHO) என்ற பெயரில் ஐநா ஒவ்வொரு ஆண்டும் வெளியிடுகிறது. உதவிக்காக ஏங்கும் மக்களின் எண்ணிக்கையை மட்டும் கணக்கிட்டால் மக்கள் தொகை அதிகமுள்ள சீனா, இந்தியா விற்கு அடுத்தபடி இதுவே உலகின் மூன்றா வது பெரிய நாடாக இருக்கும். இந்த மக்கள் உலகின் பல பகுதிகளில் 68 நாடுகளில் வாழ்கின்றனர். என்றாலும் ஐநா 1 பில்லியன் (100 கோடி) டாலர் உதவிக்கான நிவாரணப்பணிகளைத் தொடங்கியுள்ள 10 நாடுகளில் தேவை மிக அதிகமாக உள்ளது.

**ஐநாவின் புள்ளிவிவரங்கள்**

இந்நாடுகளின் பட்டியலில் ஆப்கானிஸ் தான், சிரியா, ஏமன், எத்தியோப்பியா, காங்கோ மக்கள் குடியரசு, சோமாலியா போன்றவை அடங்கும். இப்பகுதிகளில் வரலாறு காணாத கொடும் பஞ்சம் ஏற்படும் என்று அஞ்சப்படுகிறது. 2023ல் ஆப்கா னிஸ்தானிற்கு 4.6 பில்லியன், சிரியாவிற்கு 4.4 பில்லியன், ஏமன் நாட்டிற்கு 4.3 பில்லி யன், எத்தியோப்பியாவிற்கு 3.5 பில்லி யன், காங்கோ மற்றும் சோமாலியாவிற்கு 2.3 பில்லியன், தெற்கு சூடான் மற்றும் சூடான் நாடுகளுக்கு 1.3 பில்லியன், நைஜீரியாவிற்கு 1.2 பில்லியன் டாலர் நிவாரண உதவி தேவைப்படுகிறது.

**கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போகும்போது**

இன்றுள்ள நிலையில் 230 மில்லியன் மக்களுக்கு தேவையான உதவியை ஐநா மற்றும் பங்காளி நாடுகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் 2022இல் கிடைக்கவேண்டிய உதவியில் 44 விழுக்காடு மட்டுமே கிடைத்தது. இது கொடையாளி நாடுகளின் குற்றமில்லை என்று மார்ட்டின் கூறுகிறார். யுகே தவிர மற்ற நாடுகள் உதவி செய்தன. என்றாலும் பெருமளவிலான மக்களுக்கு நிவாரணம் அவசியமாக இருப்பதால் அவர்களுக்கு அதைக் கிடைக்கச்செய்வதில் பல இடர்பாடுகள் உள்ளன என்று அவர் கூறுகிறார்.

**வரும் ஆண்டு எப்படி இருக்கும்?**

பூமி சூடாகிக்கொண்டிருப்பது, கொரோ னாவின் தாக்கம், காலநிலை மாற்றம் போன்றவை சேர்ந்து நிலைமையை மோசமாக்குகிறது. இதனால் 2023 கடந்த காலத்தை விட மோசமாகவே இருக்கும் என்று கருதப்படுகிறது. 53 நாடுகளில் வாழும் 222 மில்லியன் மக்கள் இதனால் கடும் உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொள் வர். 37 நாடுகளில் இருக்கும் 45 மில்லியன் மக்கள் உணவில்லாமல் உயிரிழக்கும் ஆபத்து உள்ளது என்று அறிக்கை கூறுகிறது. கொரோனா பாதிப்பில் இருந்து இன்னும் உலகம் மீளாதபோது காலரா, மற்ற நோய்கள் பெருகும். வாழ்வா சாவா என்ற போராட்டத்தில் உயிர் வாழப் போராடும் மக்களுக்கு இந்த நிதியுதவி அவர்களை மரணத்தில் இருந்து மீட்டு வர உதவும் நிதி. பசி பட்டினியால் உலகில் எந்த ஒரு உயிரும் இழக்கப்படக்கூடாது என்ற முனைப்புடன் சர்வதேச சமூகம் செயல்பட்டால் மட்டுமே இந்நிலை மாறும். உதவிக்கரம் நீட்ட உலகம் தயாராகுமா?

●

# பழைய ஓய்வூதியம் திரும்பப் பெறுவது பாவமா?

**- தெ.வாசுகி**

புதிய ஓய்வூதியத் திட்டம் (அ) தேசிய ஓய்வூதியத் திட்டம் என்பது ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தால் (PFRDA) ஒழுங்குபடுத்தப்படும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமாகும். இதன் கீழ் ஊழியர்கள் தங்கள் சம்பளத்தில் 10% சதவீதத்தை (அடிப்படை ஊதியம் (ம) அகவிலைப்படி) பங்களிக்கின்றனர். மாநில அரசுகள் அரசு ஊழியர்களின் புதிய ஓய்வூதிய கணக்கில் 14% சதவீத பங்களிப்பை வழங்குகிறது. டிசம்பர் 2022 நிலவரப்படி இந்தியாவில் 59.78 இலட்சம் மாநில அரசு ஊழியர்கள் NPS திட்டத்தில் இருக்கின்றனர். இதன் மொத்த சொத்துக்கள் 4.27இலட்சம் கோடி ஆகும்.

இந்நிலையில் ராஜஸ்தான், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், பஞ்சாப், இமாச்சலப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் பழைய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெறுவதாக அறிவித்ததைத் தொடர்ந்து இந்திய ரிசர்வ் வங்கி பழைய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெறுவது வரும் ஆண்டுகளில் மாநிலங்களின் நிதிச்சுமையை அதிகரிக்கும் என எதிர்காலத்தில் பெரும் ஆபத்தை விளைவிக்கும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது அரசு ஊழியர்களிடையெ பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதே இந்திய ரிசர்வ் வங்கியானது பண மதிப்பிழப்பு நடவடிக்கையை RBI சட்டத்தி;ற்கு புறம்பாக மோடி அரசு அறிவித்தபோது அமைதி காத்துவிட்டு இப்பொது அரசு ஊழியர் நலனுக்கு எதிராக பேசுவதென்பது எரிகிற கொள்ளியில் எண்ணெய் ஊற்றுவது போலல்லவா இருக்கிறது.

இந்நிலையில் தான் 2023 ஜனவரி-8 டெல்லி டல்கட்டோரா ஸ்டேடியத்தில் நடைபெற்ற மத்திய மாநில அரசு ஊழியர்கள் இணைந்து நடத்திய கருத்தரங்கில் முன்மொழியப்பட்ட முதல் தீர்மானம் PFRDA வை கலைப்பதாகும். இந்த அறிவிப்பு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் அவர்களின் தூக்கத்தை கலைத்து விட்டது போலும். உடனே பாராளுமன்றத்தில் PFRDA சட்டத்தின்படி அக்ரிமென்டில் கையெழுத்திட்ட பிறகு பிடித்தம் செய்யப்பட்ட பங்கினை மாநிலங்களுக்கு திரும்ப வழங்க முடியாது என்று அறிவித்தது மாநிலங்களிடையே பெரும் சர்ச்சைக்குள்ளானது. இதனைத் தொடர்ந்து குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது ராஜ்யசபாவில் பேசிய பாரத பிரதமர் மோடி அவர்கள் பழைய ஓய்வூதியம் திரும்ப பெறுவது பாவம் என்று மாநிலங்களுக்கு அறிவுறுத்தியுள்ளது மத்திய மாநில அரசு ஊழியர்களிடையே கடும் கொந்தளிப்பையும் மோடி அரசின் மீது கடும் அதிருப்தியையும் உண்டாக்கியுள்ளது. மத்திய மாநில அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியம் வழங்குவது பாவமா? என்ற கேள்வியை முன்வைத்து அனைத்திந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளத்தின் (AISGEF) தேசிய செயற்குழு கூட்டம் 2023 பிப்ரவரி 11&12 ஆகிய நாட்களில் பஞ்சாப் மாநிலம், சண்டிகர் பக்னாபவன், செக்டார்-29D-ல் நடைபெற்றது. AISGEF – ன் அகில இந்திய தலைவர் சுபாஷ்லம்பா கொடியேற்றி துவக்கி வைத்தார். பஞ்சாப் துணை சேவைகள் கூட்டமைப்பு (அறிவியல்) மற்றும் UT சண்டிகர் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் கூட்டமைப்பு இணைந்து தேசிய செயற்குழுவை நடத்தினார்கள். செயற்குழுவில் 26 மாநிலங்கள் மற்றும் ய+னியன் பிரதேசங்களின் செயற்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர். சண்டிகர் ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்கள் கூட்டமைப்பு தலைவர் ரக்பீர்சந்த் பிரதிநிதிகளை வரவேற்றார்.

கார்ப்பரேட் நிறுவனங்களின் லட்சக்கணக்கான கோடி கடன் தள்ளுபடி செய்வது, கார்ப்பரேட் வரியை 30% சதவீதத்திலிருந்து 22% சதமாக குறைத்தது. கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு லட்சம் கோடி நிவாரணம் வழங்குவது ஏழைகளின் உணவுப்பொருட்களுக்கு ஜி.எஸ்.டி. வரி விதிப்பது என மக்களின் நலனில்

அக்கறையற்ற கார்ப்பரேட் நலன் மட்டுமே முழுமூச்சாக கொண்ட மோடி அரசின் செயல்பாடு குறித்தும், சர்வதேச நிகழ்வு, தேசத்தின் வளர்ச்சி மற்றும் தேசிய நிலைமைகள், தொழிலாளர்கள் கோரிக்கைகள மற்றும்; தொழிலாளர்கள் உரிமைகள் குறித்தும் மத்திய அரசின் அணுகுமுறை குறித்தும் AISGEF – ன் பொதுச்செயலாளர் தோழர் ஏ.ஸ்ரீகுமார் அறிக்கை முன்மொழிந்தார். விவாதத்தில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பிரதிநிதிகள் தங்கள் மாநிலங்களின் அறிக்கை மற்றும் தங்களது சங்கங்களின் இயக்க நடவடிக்கைகள் குறித்து பங்கேற்றனர். நமது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் (TNGEA) சார்பில் துணை பொதுச் செயலாளர் தெ.வாசுகி மற்றும் மு. சீனிவாசன் ஆகியோர் தேசிய செயற்குழு விவாதத்தில் பங்கேற்றனர்.

முன்னதாக இந்திய மின் ஊழியர் சம்மேளனத்தின் செயலாளர் சுதீரதத்தா மின்சாரம் விநியோகம் மற்றும் தின் இணைப்புகளை தனியாரிடம் ஒப்படைக்கும் கொள்கைகளை கைவிட வேண்டும் என்று மத்திய அரசுக்கு எதிராக மின் ஊழியர்கள் மற்றும் மின் பொறியாளர்கள் நடத்தும் இயக்கத்திற்கு வலுவான ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொண்டனர்.

தேசிய செயற்குழுவில் AISGEF – ன் தலைவர் சுபாஷ்லம்பா பேசுகையில் பழைய ஓய்வூதியத்தை திரும்ப பெறுவது பாவமல்ல என்றும், பழைய ஓய்வூதியம் பெறுவது இந்த நாட்டின் கோடிக்கணக்கான ஊழியர்களின் உரிமை என்றும், அதனால் PFRDA சட்டத்தை உடனே கலைக்க வேண்டும், பழைய ஓய்வூதியம் அனைவரும் திரும்ப பெறவேண்டும், ஒப்பந்த முறையை ரத்து செய்து ஒப்பந்த தொழிலாளர்களை முறைப்படுத்த வேண்டும், சம வேலைக்கு சம ஊதியம் வழங்க வேண்டும், பணிப்பாதுகாப்பு வழங்க வேண்டும், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் அரசுத்துறைகளை தனியார் மயமாக்குவதை தடை செய்ய வேண்டும். மத்திய மற்றும் மாநிலங்களை அரசுத்துறைகளில் காலியாக உள்ள 6 லட்சத்திற்கும் மேற்பட்ட பணியிடங்களை பணிச்சுமைக்கு ஏற்ப உடனடியாக நிரப்பிட வேண்டும், கொரோனா பெருந்தொற்று காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட 18 மாதங்களுக்கான DA நிலுவைத் தொகையை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனநாயக உரிமைகளையும், தொழிற்சங்க உரிமைகளையும் பாதுகாக்க நாடு முழுவதும் பிரச்சார பயணம் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தார். இத்தேசிய செயற்குழு சட்டத்தில் AISGEF – ன் பொருளாளர் சசிகாந்த்ராய், உதவிப் பொதுச் செயலாளர் மு.அன்பரசு, துணைத்தலைவர் உமேஷ் சந்திராசில்புலே, சுதபாஹஸ்ரா, சதீஷ்ராணா, எம்.ஒ.அஜீத்குமார், செயலாளர் என். டி.திவாரி கோபால் தத்ஜோஷி, பிரேந்திரசிங் பாகேல், புர்ஜிதசிங், சுதப்சிங் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தேசிய செயற்குழு கூட்டத்தில் கீழ்கண்ட முடிவுகள் அறிவிக்கப்பட்டது.**

1. மார்ச் 10 ஆம் தேதிக்குள் அனைத்து மாநிலங்களிலும் மத்திய, மாநில தொழிற்சங்கங்கங்கள் இணைந்து கருத்தரங்கங்கள் நடத்தி முடித்திட வேண்டும்.
2. மார்ச் 8 அனைத்து மாவட்டங்களிலும் தொழிற்சங்கங்கங்கள் மற்றும் மகளிர் அமைப்புடன் இணைந்து சர்வதேச மகளிர் தினம் நடத்த வேண்டும்.
3. மார்ச் 14 ஆம் தேதி நாடாளுமன்ற வளாகத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது.
4. ஏப்ரல் -5 ஆம் தேதி புதுதில்லியில் நடைபெறும் விவசாயிகள் மற்றும் தொழிலாளர் பேரணிக்கு வலுவாக ஆதரவு அளிப்பதுடன் பேரணியிலும் பங்கேற்பது வேண்டும்.
5. ஜூன் மாத இறுதிக்குள் அனைத்து மாவட்டங்கள் வட்டங்களிலும் மாநில அரசு ஊழியர்கள் மாநாடு நடத்திட வேண்டும்.
6. ஜூலை மாதம் மத்திய மாநில அரசு ஊழியர்கள் தலைமையில் பல குழுக்கள் அமைத்து நூற்றுக்கணக்கான வாகன பிரச்சாரம் செய்து வாகனப்பிரச்சார குழுவானது நவம்பர் 3 ஆம் தேதி புதுதில்லி சென்றடைந்து “சலோ டெல்லி” என்ற முழக்கத்துடன் கூட்டங்களை நடத்தி முடிவில் கடும் சீற்றத்துடன் டெல்லியில் பேரணி நடைபெறும் பேரணியின் முடிவில் அடுத்தகட்ட பேரியக்கம் குறித்து அறிவிக்கப்படும். ●

# மாநில அரசின் உரிமைகளை பறிக்கும் ஒன்றிய அரசின் மாநில கூட்டுறவு சங்கங்கள் (திருத்தச்) சட்டம்

**– ஆ.கிருஷ்ணமூர்த்தி**

கூட்டுறவு இயக்கமானது நாட்டு மக்களின் அன்றாட வாழ்வில் ஓர் அங்கமாக விளங்குவதுடன் நாட்டு மக்களின் நலனுக்கு குறிப்பாக நலிவுற்ற பிரிவினரின் நல்வாழ்விற்கு முக்கியப் பங்காற்றி வரும் அமைப்பாகும். கூட்டுறவு அமைப்புகள் தன்னாட்சி பெற்ற அமைப்புகளாக திகழ வேண்டும் என்பதற்காக ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின்போது இடதுசாரிகளின் வலியுறுத்தல் காரணமாக அரசமைப்புச் சட்டத்தில் 97ஆவது திருத்தம் 2011-இல் நிறைவேற்றப்பட்டது

கூட்டுறவு சங்கங்கள் விவகாரம் மாநிலப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. சங்கங்களை அமைப்பது, ஜனநாயக ரீதியில் நிர்வகிப்பது உள்ளிட்டவற்றை ஒன்றிய, மாநில அரசுகள் ஊக்குவிக்க வேண்டும் என அரசமைப்பு சட்ட 97ஆவது திருத்தம் பிரிவு 43 வலியுறுத்துகிறது. பிரிவு 19(1)சி, சில கட்டுப்பாடுகளுடன் கூட்டுறவு சங்கங்களை உருவாக்கிக் கொள்வதற்கான அடிப்படை உரிமையை மக்களுக்கு வழங்குகிறது. கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர் விவ காரங்கள், அவர்களின் பதவிக்காலம், மேலாண்மை உள்ளிட்ட விவரங்களை 9 பி பகுதி வழங்குகிறது. கூட்டுறவு சங்கங்கள் மாநிலப் பட்டியலில் இடம் பெற்றுள்ளதால் ஒன்றிய அரசு இயற்றிய 97ஆவது அரசமைப்புச் சட்ட திருத்தம் சட்ட விதிகளை மீறி உள்ளதாக குஜராத் உயர்நீதி மன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு பின் குறிப்பிட்ட பகுதிகளை ரத்து செய்து உத்தரவிட்டது.



இதனை எதிர்த்து ஒன்றிய அரசு உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தது. நீதிபதிகள் ஆர்.எஃப். நாரிமன்,கே.எம். ஜோசப், பி.ஆர் .கவாய் ஆகியோரைக் கொண்ட அமர்வு விசா ரித்து 20. 7. 2021 அன்று வழங்கிய தீர்ப்புரையில், குஜராத் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு ஆதரவாக பெரும்பான்மை இரு நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். கூட்டுறவு சங்கங்களின் விவகாரம் மாநிலப் பட்டியலில் இடம் பெற்றுள்ளதால் சங்கங்களை அமைப்பது, நிர்வகிப்பது தொடர்பாக ஒன்றிய அரசு சட்டம் இயற்ற முடியாது எனவும் அரச மைப்புச் சட்டத்தில் புதிதாக இணைக்கப்பட்ட 9 பி பகுதியை ரத்து செய்து உத்தரவிட்டனர். அப்பகுதி அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்புகளுள் ஒன்றான கூட்டாட்சி தத்துவத்தை மீறும் வகையில் உள்ளதாகும் எனவும் நீதிபதிகள் தெரிவித்தனர். அதே நேரத்தில் 97ஆவது பிரிவில் புகுத்தப்பட்ட மற்ற பிரிவுகள் செல்லுபடியாகும் எனவும் தெரிவித்தனர். 9 பி பகுதி மாநிலங்களின் உரிமையை பறிக்கவில்லை என்று ஒன்றிய அரசு வாதிட்டது.ஆனால் உச்சநீதிமன்றம் இதனை ஏற்கவில்லை. ஒன்றிய அரசு கூட்டுறவுத் துறைக்கு என்று தனி அமைச்சகத்தை உருவாக்கியுள்ள நிலையில் உச்ச நீதிமன்றம் வழங்கி உள்ள தீர்ப்பு மிக முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது. மேலும் 2022 அக்டோபரில் மேற்படி 97 ஆவது திருத்தம் உள்ளூர் அளவில் உள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு (LOCAL COOPER ATIVE SOCI-ETIES)பொருந்தாது என்றும், அவை பல மாநில கூட்டுறவு சங்கங்களுக்கு(-MULTI STATE COOPERATIVE SO-CIETIES) மட்டுமே பொருந்தும் என்று மற்றொரு வழக்கில் தீர்ப்பளித்தது உச்ச நீதிமன்றம். இந்த தீர்ப்பு ஒன்றிய அரசுக்கு பின்னடைவான ஒன்றாகும். ஏனெனில் அது, 2011இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் அடிப்படையில் மாநில கூட்டுறவு சங்கத்தின் சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த உள்ளூர்

கூட்டுறவு சங்கங்கள் அனைத்திலும் ஊடுருவத் திட்டமிட்டு இருந்தது.

தற்போது புறவாசல் வழியாக பல -மாநில கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தை (2002) திருத்திட 2022 பல- மாநில கூட்டுறவு சங்கங்கள்(திருத்தச்) சட்ட முன்வடிவு ஒன்றினை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தி உள்ளது. தற்பொழுது முன்மொழிந்துள்ள 2022 சட்டத்திருத்தம் மிகவும் ஆபத்தானதாகும். குறிப்பாக இதில் திருத்தப்பட்ட 6-ஆவது பிரிவின்படி எந்த ஒரு கூட்டுறவு சங்கமும் அந்த சங்கத்தின் பொதுக்குழு கூட்டத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களுக்கு குறையாமல் ஆஜராகி பல மாநில கூட்டுறவு சங்கத்துடன் தன்னை இணைத்துக் கொள்வதாக தீர்மானம் கொண்டு வந்து வாக்களித்து நிறைவேற்றினால் தன்னை இணைத்துக் கொள்ள முடியும். திருத்தப்பட்ட 13- ஆவது பிரிவின்படி பல மாநில கூட்டுறவு சங்கங்கள் பங்குகள் எதையும் ஒன்றிய அரசின் ஒப்புதல் இல்லாமல் எடுத்துக் கொள்ள முடியாது. திருத்தப்பட்ட 17- ஈ பிரிவின்படி ஒன்றிய அரசாங்கத்தால் ஒரு மத்திய தேர்தல் ஆணையம் (Central Election Authority) நியமனம் செய்வதற்கும், திருத்தப்பட்ட 45- ஆவது பிரிவின் படி ஒன்றிய அரசாங்கம் இயக்குனர் குழுவை (Board of Directors) புறக்கணித்து ஒரு நிர்வாகஸ்த ரை(Administrator) நியமிக்கவும் முடியும். மேலும் கூட்டுறவு மறுவாழ்வு ,புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு நிதி நிறுவுதல்,ஒரே தணிக்கை, புகார் நிவர்த்தி பிரிவை புகுத்தி, பிராந்திய அதிகார வரம்புடன் கூட்டுறவு குறை தீர்ப்பாளரை நியமனம் செய்வது போன்ற ஷரத்துக்களும் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த திருத்தங்கள் அனைத்தும் மாநிலங்களில் உள்ள கூட்டுறவு சட்டங்களை பலவீனப்படுத்தவும், நிதிஆதாரங்களை மடைமாற்றம் செய்ய வும் மேற்கொள்ளப்படுகிற வேலையே தவிர வேறு அல்ல. பலவீனப்பட்டுக்கொண்டிருக்கும் பல -மாநில கூட்டுறவு சங்கங்களுக்குள் மீண்டும் நிதி ஆதாரத்தை செலுத்தி அவற்றை மேம்படுத்துவது என்ற பெயரிலான ஒரு திட்டமும் அவர்களிடம் உள்ளது. இதுகூட்டுறவு அமைப்புகளை மாநில அரசின் கட்டுப்பாட்டிலிருந்து கைப்பற்றி ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கான ஏற்பாடு ஆகும்.

அரசியலமைப்பு 97ஆவது திருத்தச்சட்டம் 2011 -இன்படி தமிழ்நாட்டில் கூட்டுறவு தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. 2013-ஆம் ஆண்டும், 2018-ஆம் ஆண்டும் தேர்தல் நடை பெற்றுள்ளது. 2018இல் நான்கு கட்டமாக 18244 சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டு 1, 88,400 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகங்க ளின் பதவிக்காலம் முடிவுறவுள்ள நிலையில் 2023 ஏப்ரல் மாதம் தேர்தல் அறிவிக்கப்பட உள்ளது. கூட்டுறவு இயக்கத்தினைப் பொறுத்தவரை தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கின் றது. இந்தியாவின் முதல் கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டது தமிழ்நாட்டில் தான். அத்த கைய கூட்டுறவு அமைப்புகளை பாதுகாக்க, கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிராக- மாநில அரசின் உரிமைகளை பறிக்கும் ஒன்றிய அரசின் சட்டத் திருத்தங்களுக்கு எதிராக எதிர்வரும் கூட்டுறவு தேர்தலை எதிர்கொள்வோம். ●

## “பஞ்ச்”

மொரப்பா



காந்தியின் சிரிப்பு

எல்லா பணத்தாள்களிலும்

ஒரே மாதிரிதான் இருக்கிறது

நம்முடைய சிரிப்புதான்

பணத்தைப்பொருத்து

மாறுகிறது...

# நாடு முழுவதும் பாலஸ்தீன ஒருமைப்பாட்டு ஆதரவு இயக்கம்

## சமாதான ஒருமைப்பாட்டு கழக அகில இந்திய மாநாடு அறிவிப்பு




தமிழ்நாடு மாநில பிரதிநிதிகளுடன் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில தலைவர் தோழர் மு. அன்பரசு அவர்கள்...

சண்டிகர், மார்ச் 5- நாடு முழுவதும் பாலஸ்தீன ஒரு மைப்பாட்டு ஆதரவு இயக்கம் நடத் தப்படும் என்று அகில இந்திய சமா தான ஒருமைப்பாட்டு கழகத்தின் (AIPSO) அகில இந்திய மாநாடு அறி வித்துள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத் தின் மாண்புகளை உயர்த்திப் பிடிக்க வும் ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் உலக சமாதானத்துக்கான இயக் கத்தை வலுப்படுத்துவதற்கும் ஆகிய உயரிய நோக்கங்களை முன் னிறுத்தி அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழகத்தின் (AIPSO) அகில இந்திய மாநாடு சண்டிகர் நக ரத்தில் மார்ச் 4, 5 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றன. மாநாட்டிற்கு நிலோத்பல் பாசு உள்ளிட்ட தலைமை குழுவினர் தலைமை வகித்தனர். பொதுச் செய லாளர் அருண்குமார் அரசியல் கொள்கை விளக்க அறிக்கையையும் பல்லப சென் குப்தா ஸ்தாபன அறிக்கையையும் சமர்ப்பித்தனர். கிரீஸ், கியூபா, வியட்நாம், இலங்கை, வங்க தேசம், நேபாளம் உட்பட பல்வேறு நாட்டில் உள்ள சமாதான ஒருமைப் பாட்டு இயக்கத்தின் தலைவர்கள் கலந்து



அயல் நாட்டு பிரதிநிதிகளுடன் மாநில தலைவர் தோழர் மு. அன்பரசு அவர்கள்...

கொண்டு வாழ்த்துரை வழங் கினர். பாலஸ்தீன இயக்கத்தின் தலைவரான அக்யேல் என்பவருக்கு விசா வழங்கப்படவில்லை. ஆத லால் அவரால் மாநாட்டில் கலந்து கொள்ள முடியவில்லை. எனவே அவரது உரை காணொலியாக காட்டப்பட்டது. மாநாட்டில் 350 பிரதி நிதிகளும், பார்வையாளர்களும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டின் சார்பாக மிருதுளா, மருத்துவர் சாந்தி ஆகியோர் விவா தத்தில் பங்கேற்றனர். மாநாட்டில் 133 பேரைக் கொண்ட பொதுக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. அருண் குமார், ஹர்சந்த் சிங் ஆகிய இரு வரும் பொதுச்செயலாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். பாலஸ்தீனர்களுக்கு குடியுரிமை யை அவர்களுடைய நாட்டிலேயே மறுக்கக்கூடிய இஸ்ரேலை கண் டித்தும், பாலஸ்தீன மக்களுடைய உரிமைகளுக்காக, ஒருமைப் பாட்டைத் தெரிவித்தும் உக்ரைன் போரை உடனடியாக நிறுத்த கோரி யும், கியூபாவுக்கு ஒருமைப்பாட்டை யும் ஆதரவையும் தெரிவித்து, அரசி யல் அமைப்புச் சட்டத்தின் மாண்பு களை பாதுகாப்பதற்குமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.பாலஸ்தீன மக்களின் குடியுரிமை யை மீட்டெடுப்போம் என்றும் பாலஸ்தீன ஒருமைப்பாட்டு ஆதரவு இயக்கத்தை நாடு முழுவதும் நடத்த வும் மாநாட்டில் முடிவு செய்யப் பட்டது. தமிழ்நாட்டிலிருந்து உதவித்தலை வராக ரவீந்திரநாத், செயலாளராக ஆறுமுகநயினார் மற்றும் டி.செந்தில் குமார், கே சி கோபி குமார், ஆர் ராஜேந்திரன், எஸ். மிருதுளா, பி செந்தில்குமார், டாக்டர் சாந்தி, பாலச் சந்திரன், மணி மோகன் ஆகிய செயற்குழு உறுப்பினர்கள் உள்பட பத்து பேர் பொதுக்குழுவுக்கு தேர்ந் தெடுக்கப்பட்டனர். ●

# அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகம்

# அமைப்பின் நோக்கங்கள்

1. இந்தியாவின் சுதந்திரம், இறையாண்மை ஆகியவை காக்கப்பட வேண்டும். நமது நாட்டிற்கெதிரான ஏகாதிபத்திய, காலனியாதிக்க சக்திகள் ஆகியவற்றின் தாக்குதல், சதிகள் இவற்றிலிருந்து நம் நாட்டைக் காப்பாற்றிட வேண்டும். இந்தியாவின் சுதந்திரமான பொருளாதார வளர்ச்சி, சுயசார்பு ஆகியவை காத்திட, நாட்டுப்பற்றுள்ள அனைவரது ஒத்துழைப்போடும் இந்த அமைப்பு முயற்சிகளை மேற்கொள்ளும்.

2. அமைதி,விடுதலை, சமநீதி, மக்களின் முன்னேற்றம் ஆகியவற்றிற்காகப் போராடும். நவீன காலனியாதிக்கம், இனவெறி, ஏகாதிபத்திய மேலாதிக்கம், அதன் தலையீடு ஆகியவற்றிற்கு எதிராக உலகின் பல்வேறு நாடுகளில் போராடி வருகின்றனர். இந்த மக்களுக்கு ஆதரவாக இந்திய மக்களை திரட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

3. பிற நாடுகள் மீது நடத்தப்படும் ஆக்கிரமிப்பு போர்களுக்கு முடிவு கட்டவும், அனைத்து நாடுகளும் தங்களது படைபலத்தை குறைப்பதன் மூலம் உலகின் பாதுகாப்பு, நாடுகளிடையே அமைதி ஆகியவற்றை உருவாக்கி, உலக அளவில் பதற்றமான சூழல் உருவாவதைத் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

4. அமைதியையும் சுதந்திரத்தையும் விரும்புகின்ற அணிசேரா நாடுகள் நமது அண்டை நாடுகள் ஆகியவற்றோடு நமது நாடு மேற்கொள்ளும் நட்புறவு மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்த பாடுபட வேண்டும்.

5. உலக அமைதி காத்திடவும், போராடும் மக்களுக்கு ஆதரவாகவும் செயல்படும் இயக்கங்களோடு இணைந்து பணியாற்றுவோம். இதன்மூலம் உலகின் அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளையும் வலுப்படுத்த பாடுபடுவோம்.

6. மனித உரிமைகள் மற்றும் பொருளாதார, சமூக உரிமைகள், அரசியல் மற்றும் சிவில் உரிமைகள், பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகள் ஆகியவை குறித்த சர்வதேச உடன்படிக்கைகளை அமலாக்கப் பாடுபடுவோம்.

7. உயிரினங்களின் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்தும் சூழலை மாசுபடுத்துதல், இயற்கை வளங்களை சீரழித்தல் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே உருவாக்க முயற்சிகளை மேற்கொள்ளும்.

8. மக்கள் நலன் சார்ந்த பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்காக வளரும் நாடுகளிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்திடவும், பசி, வறுமை ஆகியவற்றை முற்றாக நீக்கிடவும் பாடுபடுவோம்.

மேற்கண்ட பணிகளை நிறைவேற்றிட அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழகம் பாடுபடும். ●



"பார்த்தீங்களா, ஆன்லைன் விளையாட்டுக்களில் வெல்லக்கூடிய தொகைக்கு வரிவிதிப்பது கொடுமைன்னு முதல்வர் சொல்லிருக்காரு"

"அப்ப டாஸ்மார்க் கடையில குடிச்சுட்டு வர்ற பைக் காரனை பிடிச்சு அபராதம் போடறது மட்டும் சரியாக்கும்"

கட்டுரை

# இணையற்ற இயற்பியல் விஞ்ஞானி வில்லியம் ஹாக்கிங்

**- பெரணமல்லூர் சேகரன்**

ஸ்டீவன் வில்லியம் ஹாக்கிங் 1942ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் நாள் பிறந்தார். ஆங்கிலேய கோட்பாட்டு அறிவியலாளரும், அண்டவியலாளரும், நூலாசிரியரும் ஆவார். இவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் கோட்பாட்டு அண்டவியல் மையத்தின் இயக்குநராகப் பணியாற்றினார். இவர் உரோசர் பென்ரோசுடன் இணைந்து பொதுச் சார்புக் கோட்பாட்டில் புவியீர்ப்பு அருநிலைத் தேற்றங்களை நிறுவியமை, ஆக்கிங்கு கதிரியக்கம் என அழைக்கப்படும் கருந்துளைகளின் கதிர்வீச்சு உமிழ்தலை எதிர்வு கூறியமை போன்ற அறிவியல் ஆய்வுகளுக்காகப் பெரிதும் அறியப்படுகிறார். இவரே முதன் முதலில் அண்டவியலுக்கான கோட்பாட்டை உருவாக்கி, பொதுச் சார்புக் கோட்பாடு, குவாண்டம் இயங்கியல் ஆகியவற்றின் மூலம் விளங்கப்படுத்தினார். குவாண்டம் இயங்கியலின் பல-உலகங்களுக்கான விளக்கத்திற்குத் தீவிர ஆதரவாளராக விளங்கினார்.

ஸ்டீவன் ஹாக்கிங் அமெரிக்காவின் உயர்ந்த குடிமகனுக்கான விருதைப் பெற்றார். 2002 ஆம் ஆண்டில், பிபிசி நடத்திய பிரித்தானியாவின் 100 பெரும் புள்ளிகள் கணிப்பில் 25வதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1979 முதல் 2009 வரை கேம்பிரிச்சுப் பல்கலைக்கழகத்தில் கணிதவியல் பேராசிரியராகப் பணியாற்றினார். இவர் தான் உருவாக்கிய கோட்பாடுகளைப் பற்றியும், அண்டவியல் தொடர்பிலும் பிரபலமான அறிவியல் கட்டுரைகளை எழுதிப் புகழ் பெற்றார். இவரது காலத்தின் ஒரு வரலாற்றுச் சுருக்கம் என்ற புகழ்பெற்ற கட்டுரைத் தொடர் இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் சண்டே டைம்சு இதழில் 237 வாரங்களாக வெளிவந்து சாதனை புரிந்தது. சாதாரண மக்களும் வாசித்துப் பயனடையும் வகையில் இலகுவான மொழியில், அறிவியற் சமன்பாடுகளைத் தவிர்த்து எழுதப்பட்ட இவரது அறிவியல் நூல்கள் பலரையும் கவர்ந்தன.

21 வயதிலேயே, முதலாவது திருமணத்துக்குச் சற்றுமுன்னர் தசையூட்டமற்ற பக்க மரப்பு நோய் எனவும் அழைக்கப்படும் இயக்கு நரம்பணு நோயால் தாக்குண்டார். இக் குணப்படுத்த முடியாத நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, படிப்படியாகக் கை, கால் முதலிய உடலியக்கங்களும் பாதிக்கப்பட்டு, பேச்சையும் இழந்த நிலையில், கணினியூடாகப் பேச்சுத் தொகுப்பி மூலம் மற்றவர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளும் கட்டாயத்துக்குள்ளான இவர், இயற்பியல் ஆராய்ச்சிகளிலும், எழுத்துத்துறையிலும், பொதுவாழ்விலும் மிகவும் ஈடுபாடு உள்ளவராகவே இருந்தார். இவர் 2018 மார்ச் 14 இல் தனது 76-வது அகவையில் காலமானார்.

அமெரிக்காவில் உள்ள அனென்பெர்க் அறக்கட்டளை இயற்பியல் கணிதத்தை மாணவர்களுக்கு எளிய நடையில் புதிய கோணத்தில் வடிவமைப்பவர்களுக்கு 6 மில்லியன் டாலர் பரிசு என 1986-ல் அறிவித்தது. இந்தச் சவாலை ஏற்று, இயற்பியல் அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங் அரை மணி நேரத்திற்கு ஒரு காட்சி விளக்கம் வீதம் 26 மணி நேரம் ஓடக் கூடிய ‘காலம் ஒரு வரலாற்றுச் சுருக்கம்’ என்ற பாடத் திட்டத்தை உருவாக்கிக் கொடுத்துப் பரிசு பெற்றார். இந்தச் சிறந்த படைப்பு உலகத் தமிழ் மொழி அறக்கட்டளையால் 2000 ஆண்டு ஒரு கோடி ரூபாய் செலவில் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டது.

ஸ்டீபன் ஹாக்கிங் 14 மார்ச்சு 2018 அன்று தனது 76 ஆவது வயதில் காலமானார். மாமேதை கார்ல் மார்க்ஸ் மறைந்த நாளில் மிகச் சிறந்த மனிதர் ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங் மறைந்தது குறிப்பிடத்தக்கது. ●

கட்டுரை

# சிறு, குறு, நடுத்தர தொழில்களின் நிலையும், இளைஞர்களின் வேலைவாய்ப்புக் கனவுகளும்!

– க. கனகராஜ்

இந்தியா சுதந்திரம் அடைந்தபொழுது சுயசார்பை உறுதிப்படுத்துவதற்காக பல்வேறு ஏற்பாடுகளை ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் செய்தன. அவற்றில் பொதுத்துறை மற்றும் சிறுகுறு தொழில் பாதுகாப்பு என்பது மிகவும் முக்கியமானதாகும். 2008 ஆம் ஆண்டு அமெரிக்காவில் துவங்கிய மறு அடமானம் (சப் - பிரைம்) நெருக்கடி உலக நாடுகள் பலவற்றில் பொருளாதாரத்தை ஒரு அசைப்பு அசைத்து பார்த்தது. சில நாடுகளின் அரசு காசோலைகளே பணமின்றி திரும்பும் நிலை ஏற்பட்டது. வேலை இழப்பு, ஆட்குறைப்பு, சம்பள குறைப்பு, ஆலை மூடல் என்று சமூகம் மொத்தத்தையும் ஆட்டிப் படைத்தபோது இந்தியாவும், சீனாவும் மிகப்பெரிய பிரச்சனைகள் ஏதுமின்றி சமாளித்தன. இத்தனைக்கும் உலகில் முதல் மற்றும் இரண்டாவது மக்கள் தொகை அதிகம் உள்ள நாடுகள் சீனாவும், இந்தியாவும். சீனா அந்த நெருக்கடியிலிருந்து தப்பித்தற்கும் பெருமளவு பாதிக்கப்படாமல் இருந்ததற்கும் தங்கள் சிறுகுறு நிறுவனங்கள் தான் காரணம் என்று அதிகாரப்பூர்வமாகவே அறிவித்தார்கள். இந்திய பிரதமராக அப்போதிருந்த மன்மோகன்சிங், இந்தியா 2008க்கு பிந்தைய நெருக்கடியில் மேற்கத்திய நாடுகள் போல பாதிக்கப்படாமல் இருந்ததற்கு இந்தியாவின் அடித்தளம் தான் காரணம் என்றும் குறிப்பிட்டிருந்தார். அவர் அடித்தளம் என்று குறிப்பிட்டது பொதுத்துறையையும், சிறுகுறு நடுத்தர தொழில்களையும்தான். இத்தனைக்கும் நவீன தாராளமயக் கொள்கையின் ஒரு பகுதியான தனியார் மயமாக்கலை துவக்கி வைத்ததில் முக்கிய பங்காற்றியவர் மன்மோகன் சிங். அவரே அப்படிக் குறிப்பிட்டார் என்பது தான் முக்கியம்.

### மோடி அரசின் தோல்வி

தற்போது, இந்தியா கடும் நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருக்கிறது. இந்த நெருக்கடி இன்னும் தீவிரமாகும் என்று சொல்லப்படுகிறது. நெருக்கடி என்றாலே அதன் சுமை முழுவதையும் ஏழை எளிய நடுத்தர மக்களின் தலையில் கட்டுவது தான் முதலாளித்துவத்தின் மிக இயல்பான, மிக எளிதான நடைமுறையாகும். இந்தியா எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனைகளில் மிக முக்கியமானது வேலையின்மை பிரச்சனை. மோடி ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்கு முன்பாக, தான் ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவேன் என சவடால் அடித்துக் கொண்டிருந்தார். ஆனால், ஆட்சி பொறுப்பிற்கு வந்த பிறகு, அதைப்பற்றி பேசுவதையே மறந்துவிட்டார். உலகில் இளைஞர்களின் நாடாக இந்தியா இருப்பது இந்த நூற்றாண்டில் இந்தியாவிற்கு மிகப்பெரும் வலிமை என்று பேசப்பட்டது. ஆனால், அந்த இளைஞர்களுக்கு வேலை வழங்குவதில் இந்த அரசாங்கம் முற்றிலும் தவறிவிட்டது.

### கணிசமான வேலைவாய்ப்பு எங்கே உள்ளது?

வேலை வாய்ப்பு என்றாலே அரசு, பொதுத்துறை, பன்னாட்டு நிறுவனங்கள் என்றுதான் சிந்தனை கட்டமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தியாவில் முற்றிலும் கவனிக்கப்படாத; புறக்கணிப்பிற்கும், ஒதுக்குதலுக்கும் இன்னும் சொல்லப்போனால் தாக்குதலுக்கும் உள்ளான பகுதியாக இருக்கும் சிறுகுறு தொழில்களே வேலை வாய்ப்பு வழங்குவதில் முன்னிலை வகிக்கிறது. அரசுத்துறை, பொதுத்துறை, தனியார் பெரு நிறுவனங்கள், அந்நிய நிறுவனங்கள் இவை அனைத்தும் உருவாக்குகிற வேலை வாய்ப்புகளோடு ஒப்பிட்டால் சிறுகுறு தொழில்களில் வேலை வாய்ப்பு வழங்குவது மிகமிக அதிகமானதும், முக்கியமானதுமாகும். இந்தியாவில் 2014 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தபடி, வேலை செய்து கொண்டிருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 47.41 கோடி ஆகும். ஆனால், சமீபத்திய கணக்குகளும், புள்ளி விபரங்களும் தற்போது இந்தியாவில் ஒட்டுமொத்தமாக வேலை செய்து கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கை 41 கோடி என்று தெரிவிக்கிறது. அதாவது, 8 1/2 ஆண்டுகளுக்கு பின்பு

இந்தியாவிலிருந்து வேலை வாய்ப்புகளில் ஏறத்தாழ 6 1/2 கோடி குறைந்துவிட்டது. இன்றைய நிலையில் மொத்த வேலைவாய்ப்புகளில் 11 கோடிக்கும் அதிகமாக வேலைவாய்ப்புகளை சிறுகுறு தொழில்களே வழங்கிக் கொண்டிருக்கிறது.

இதில், குறுந்தொழில்களின் பங்கு 90 சதவிகிதத்திற்கும் அதிகம். மூலதனத்தை ஈர்ப்பதற்காக இந்திய சட்டதிட்டங்களும் கொள்கைகளும் வளைக்கப்பட்டு முதலீட்டில் 50 சதவிகிதம் வரை மானியம் கொடுத்து அந்நிய நிறுவனங்களையும் இந்திய தொழில் நிறுவனங்களையும் விரும்பி அழைத்த பிறகும் வேலை வாய்ப்புகள் ஒன்றும் வானத்தை பொத்துக் கொண்டு கொட்டிவிடவில்லை. ஆனால், தங்கள் சேமிப்பையே முதலீடாக்கி தங்கள் குடும்ப தேவைக்கு பொருள் ஈட்டுவதற்காக உருவாக்கப்பட்டுள்ள சிறுகுறு நிறுவனங்கள் ஒட்டுமொத்த வேலைவாய்ப்பில் நான்கில் ஒரு பகுதிக்கும் அதிகமாகவே வழங்கி கொண்டிருக்கிறது. இந்த நிறுவனங்களில் பணி புரிந்து வரும் ஏறத்தாழ 100 சதவிகிதம் பேர் மிகக்குறைந்த கல்வி வாய்ப்பை பெற்றவர்களாகவோ அல்லது ஓரளவு கல்வி வாய்ப்பை பெற்றவர்களாவோ இருக்கிறார்கள். இந்த நிறுவனங்கள் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட இடத்தை மையப்படுத்தாமல் பல்வேறு பகுதிகளில் உருவாக்கப்படுகின்றன. இதன் காரணமாக பொருளாதார நடவடிக்கையும் பொருளாதார பரவலையும் இது உருவாக்குகிறது. மாதம் இரண்டு லட்சம் ரூபாய் சம்பளம் வாங்குகிற ஒருவர் அதை முழுவதையும் ஒரே மாதத்தில் செலவழித்து விடுவதில்லை. ஆனால், சிறுகுறு தொழில்களில் பணிபுரிகிற பெரும் பகுதியினர் அவர்களின் வருமானம் முழுவதையும் கிட்டத்தட்ட சந்தையில் செலவழித்து விடுகிறார்கள். சந்தைக்கு வருவதன் மூலமாகவே இந்த பணம் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுகிறது. அந்த வகையில் சிறுகுறு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் பெரும்பாலான சம்பளம் உடனடியாகவே சந்தைக்கு வருவதன் மூலம் பொருளாதார நடவடிக்கையை தூண்டுகிறது.

**தொழில் பரவல்...**

சிறுகுறு தொழில்கள் சில இடங்களில் தொழிற்பேட்டைகளில் இயங்குகின்றன. ஆனால், பெரும்பாலான சிறுகுறு தொழில்கள் அதை உருவாக்குவது சொந்த இடத்திலோ, அல்லது விலை குறைந்த இடத்திலோ இயங்குகின்றன. இதன் காரணமாக வேலை வாய்ப்பும் ஓரிடத்தில் குவியலாக இல்லாமல் பரவலாக்கப்படுகின்றன. பல ஊரகப் பகுதிகளில் சிறுகுறு தொழில்கள் பரவிக் கிடக்கின்றன. இந்த வகையில் நகரத்திற்கும், கிராமத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை குறைப்பதிலும் பங்காற்றுகின்றன. எனவே, சிறுகுறு தொழில் பாதுகாப்பு என்பது வெறும் அந்த தொழில்களை அதன் மூலம் அந்த தொழிலை நடத்தி கொண்டிருப்பவரை பாதுகாக்கும் நோக்கம் மட்டுமில்லை. மாறாக, வேலை வாய்ப்பையும் பொருளாதார பரவலாக்குவதையும், தொழில்கள் பரவி கிடப்பதையும் உத்தரவாதப்படுத்துவதாகும்.

**நெருக்கடிக்கு முடிவுகட்ட...**

இத்தகைய தொழில்கள்தான் தொடர்ச்சியாக பணமதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி., கொரோனா, தொழில் போட்டிகள் இவற்றோடு அரசின் பாராமுகம், வங்கிகளின் கை முறுக்கல், மூலப்பொருட்களின் விலையேற்றம், மின்சாரக் கட்டணம், மாதாந்திர நிரந்தர கட்டணத் தொகை, முதன்மை நேர (பீக் அவர்) கூடுதல் கட்டணம், சொத்து வரி உயர்வு ஆகியவற்றின் காரணமாக மிகக் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றன. கடன் கொடுப்பதும் வசூலிப்பதும் இவர்களிடம் வங்கிகள் கறார் தன்மையுடன் நடந்து கொண்டு வசூலிக்கிறார்கள். பெரு நிறுவனங்களுக்கு காட்டப்படும் எந்த சலுகைகளும் இந்த நிறுவனங்களுக்கு காட்டப்படுவதில்லை. கடன் வசூலிக்கும் முறையிலும் கடனுக்கான வட்டி விகிதத்திலும் பெரு நிறுவனங்களுக்கு காட்டப்பட்டும் சலுகைகள் இந்த சிறுகுறு நிறுவனங்களுக்கு காட்டப்படுவதே இல்லை. எனவே, சிறுகுறு நிறுவனங்கள் மிகவும் நெருக்கடியான காலக்கட்டத்தில் இருந்துகொண்டிருக்கின்றன. சிறுகுறு நிறுவனங்களை பாதுகாப்பதற்கு என்பதற்கு அப்பால் தேசத்தின் பொருளாதாரம், இளைஞர்களின் வேலை வாய்ப்பு, பொருளாதார பரவலாக்கம் உள்ளிட்டவற்றோடு சம்பந்தபட்ட ஒரு அம்சமாகும். எனவே, சிறுகுறு தொழில்களை பாதுகாப்பதற்கான போராட்டம் சமூகத்தின் உணர்வாகவும், போராட்டமாகவும் மாற்றப்பட வேண்டும். இந்த தொழில் நிறுவனங்கள் முன்வைக்கும் பல்வேறு கோரிக்கைகளையும் முன்வைக்க வேண்டியது அனைத்து பகுதி மக்களின் குறிப்பாக வேலை தேடும் இளைஞர்களின் மிக முக்கியமான கடமையாகும். ●

# தன்னலமற்ற தியாகமும்! தணியாத கோபமும்!

**- தெ.வாசுகி**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் அமைப்புச் சட்டத்தின்படி அரசு ஊழியர்களின் உரிமைகளை மீட்க சமரசமற்ற போராட்டங்களை நடத்திடவும், அதே சமயத்தில் பொதுமக்களை பாதுகாப்பதற்கான தன்னலமற்ற சேவையை செய்வதும் அரசு ஊழியர் சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒவ்வொருவரின் கடமையாக இருக்கிறது. இதனால்தான் நமது அரசு ஊழியர் சங்கத்தில் இளம் தலைமுறை தோழர்கள் இரத்த தானம், கண்தானம், உடல்தானம், ஆர்கன்கள் தானம் செய்வது தொடர்ந்து அதிகரித்துவருவதுடன் பொதுமக்கள் உயிர்காக்கும் உயரிய சேவையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்ற தொழிற்சங்கங்களுக்கு முன்மாதிரியாக அமைப்பாக திகழ்கிறது. அந்த வகையில் மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம் என்பதால் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பெண்தோழர்கள் இருவரின் தன்னலமற்ற சேவையை நாம் அனைவரும் பாராட்டியே ஆகவேண்டும்.




காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனை செவிலியராக மருத்துவத் துறையில் பணிபுரிந்து வருபவர் தோழர் விஜய நிர்மலா 2023 பிப்ரவரி 5ஆம் தேதி வழக்கம்போல் பணி முடித்துவிட்டு தனது சொந்த ஊரான கம்மவார்பாளையம் செல்வதற்காக இரவு 7.30 மணியிருக்கும் காஞ்சிபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் தான் செல்ல வேண்டிய பேருந்துக்காக காத்துக்கொண்டிருந்தார். அருகில் சுமார் 68 வயது மதிக்கத்தக்க ஒரு முதியவர் மயங்கி விழுந்துவிட்டார். அவரைச் சுற்றி பொதுமக்கள் கூடிவிட்டனர். உடனே தோழர் விஜயநிர்மலா தான் செல்ல வேண்டிய பேருந்துக்காக காத்திருப்பதை விட்டு அவசர அவசரமாக சென்று கூட்டத்தை விலக்கி பார்த்தபோது முதியவர் பேச்சு மூச்சின்றி மூர்ச்சையாகி கிடப்பதை கண்டார். அவரது கையை தொட்டுபார்த்தபோது நாடித்துடிப்புநின்று விட்டது. உடல் சில்லென்று ஆகிவிட்டிருந்தது. சூழ்நிலையை உணர்ந்த தோழர் விஜய நிர்மலா சற்றும் தாமதிக்காமல் மருத்துவ உபகரணங்கள் ஏதுமின்றி சிபிஆர் எனப்படும் உயிர் மீட்பு சுவாசம் சிகிச்சை அளித்தார். அந்த முதியவர் இறந்து விட்டார் என்று போக்குவரத்து தொழிலாளர்களும் கூடியிருந்த மக்களும் நினைத்திக்கொண்டிருக்க அவரது உயிரை எப்படியும் காப்பாற்றிவிடுவோம் என்ற மனஉறுதியுடன் சிபிஆர் முறையில் முதலுதவி சிகிச்சையினை தொடர்ந்து கொடுத்துகொண்டே இருந்தார். அனைவரும் சுற்றி நிற்க நடந்தேறியது அந்த அதிசய நிகழ்வு ஆம்! முதியவருக்கு சுயநினைவு திரும்பியது. அவர் ஓய்வு பெற்ற அரசு போக்குவரத்து ஓட்டுநராவார். அவருக்கு உடனடிமருத்துவ சிகிச்சை தேவை என்பதால் 108 ஆம்புலன்சை வரவழைத்து அரசு மருத்துவ மனைக்கு அனுப்பிவைத்தார். இவரது செயலை போக்குவரத்து ஊழியர்களும் பொதுமக்களும் பாராட்டினர். அரசு ஊழியர் சங்கத்தின் காஞ்சிபுரம் மாவட்டத் தலைவர் தோழர் லெனின், மாவட்ட செயலாளர் தோழர் மருதன் மற்றும் மாவட்ட வட்டக்கிளை நிர்வாகிகள் அனைவரும் அவர் பணிபுரியும் அரசு மருத்துவ மனைக்குச் சென்று அவரது தன்னலமற்ற சேவையை பாராட்டினர். தோழர் விஜய நிர்மலா உயிர்காக்கும் முதலுதவி சிகிச்சை அளித்த விவரம் வாட்ஸ்அப் செய்தியாக வந்தது. தமிழ் நாடு முழுவதும்

அரசு ஊழியர் சங்க தோழர்கள் அவரது செயலை பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர். இச்செய்திதான் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பள்ளி மாணவர் ஒருவரின் உயிரை காப்பாற்ற உதவியது.


தோழர் காந்திமதி

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கல்லாவி என்ற கிராமத்திலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் சத்துணவு அமைப்பாளராக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையில் பணியாற்றிவரும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத் தோழர் ஜி. காந்திமதி பிப்ரவரி 14ஆம் தேதியன்று அரூரிலிருந்து தனது இல்லம் இருக்கும் கல்லாவி கிராமத்திற்கு அரசு பேருந்தில் பயணம் செய்து கொண்ருந்தபோது வழியில் விபத்து ஏற்பட்டு பள்ளி மாணவர்கள் இருவர் சீருடையுடன் சாலையில் கிடப்பதை பார்த்தவுடன் பேருந்தை உடனே நிறுத்தச்சொல்லி பேருந்திலிருந்து கீழேயிறங்கி விபத்து நடந்த இடத்தை நோக்கி பதட்டத்துடன் ஓடினார். பொதுமக்கள் சூழ்ந்துகொண்டிருந்தனர். அடிபட்ட மாணவர்களில் ஒருவர் பேச்சு மூச்சின்றி மூர்ச்சையாகி கிடந்ததை கண்ட மக்கள் அந்த மாணவன் இறந்திருப்பார் என்று கருதிவிட்டனர். உடனே காந்திமதி தோழருக்கு காஞ்சிபுரம் தோழர் விஜயநிர்மலா அவர்களைபற்றிய வாட்ஸ்அப் செய்தி நினைவுக்கு வரவே, தான் செவிலியர் இல்லையென்றாலும் அவரைப்போலவே முதலுதவி செய்து மாணவரை காப்பாற்றிவிடலாம் என்ற உறுதியான நம்பிக்கையுடன் மாணவருக்கு தன்னால் இயன்ற முதலுதவி சிகிச்சையை தொடர்ந்து அளித்துக்கொண்டிருந்தார். இவருக்கு உதவியாக ஒரு முதியவரும் உடனிருந்தார். சுமார் அரைமணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்ற உயிர்காக்கும் போராட்டத்தில் அந்த மாணவருக்கு சுயநினைவு வந்தவுடன் இவர் பெற்ற மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அருகில் இருந்த பொதுமக்கள் தக்க சமயத்தில் உதவிய இவரது செயலை பாராட்டினர். அதோடு நின்றுவிடாமல் தான் காப்பாற்றிய மாணவரை மருத்துவமனைக்கு மறுநாள் சென்று பார்த்து நலம் விசாரித்துள்ளார். மாணவர் பெயர் பிரவீண் என்றும் அவர் பதினொன்றாம் வகுப்பு மாணவர் என்றும் மாணவர்கள் பள்ளியிலிருந்து வீடு திரும்பும் போது எதிரே வந்த வாகனத்தால் விபத்து ஏற்பட்டதாகவும் தன்மகனின் உயிரை காப்பாற்றி தோழர் காந்திமதிக்கு மாணவர் நவீன் பெற்றோர் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர்.

தன்னலம் பாராது பிறர்நலம் பேணும் அரசு ஊழியர் சங்கத்தின் கண்மணிகள் காஞ்சிபுரம் மாவட்டம் தோழர் விஜய நிர்மலா மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் தோழர் காந்திமதியை போல நாம் அனைவரும் நாமும் தன்னலமற்ற தியாகத்துடன் மக்களை காப்பாற்றும் அதே வேளையில் அரசு ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்றாத அரசின் மீது தணியாத கோபத்துடன் போரிடவும் சர்வதேச மகளிர் தினத்தில் உறுதியேற்போம். ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com

# பிப்ரவரி 10 கோரிக்கைப் பேரணி


நாமக்கல்



திருச்சி



ஈரோடு



திருவண்ணாமலை



கள்ளக்குறிச்சி



சிவகங்கை



செங்கல்பட்டு



விருதுநகர்



புதுக்கோட்டை



தூத்துக்குடி

Registered Postal Registration No. TN/CH/(C)/200/2021-2023 WPP.No.TN/PMG(CCR)/
WPP-431/2021-2023 RNI No.68584/81 Posted at Egmore RMS-1 Pathirika Channel
Date of Publication 1st Week of Every Month - Posted on 10.03.2023



வட சென்னை, தென் சென்னை



வேலூர்



மயிலாடுதுறை



கன்னியாகுமாரி



திருப்பத்தூர்



திருப்பூர்



திருவாரூர்



கடலூர்



தென்காசி



கோவை



Printed and Published by M.Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai-600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai-600002.
Editor: A.SELVAM. Phone: 28441286 E-mail: arasuoozhiyar@gmail.com